JANAVINODINI.

ஜனவிநோதினி.

இல. 10.] அக்டோபர் மீ 1890. [புஸ்த. XXI.

CONTENTS.

How do men become Great?...... 217

Necessity of considering both sides of a Question.............. 221

The Life of a Bear, Chapter XXV (*Conclusion*) 225

Nothing but due Enquiry can bring the truth to light; even the Senses are unreliable at times:—A Story. (*Conclusion.*) 230

Catechism on various subjects (*Continued*):— (*The causes of Sleep and Dreams, &c.*)........... 233

News and Notes......................... 239

அட்டவணை.

மனிதர் புகழ்பெறுவதெப்படி?..... 217

நடுவுநிலைமை 221

ஓர் கரடியின் கதை, 25-ம் அத்தியாயம் (முடிவு.)........................ 225

"கண்ணாரக்கண்டதும் பொய், காதாரக்கேட்டதும் பொய், தீரவிசாரித்தது மெய்." (முடிவு.).... 230

விவிதவிஷயவிளக்கவினாவிடை (தொடர்ச்சி):—(நித்திரை, கனவு ஆகிய இவற்றின் காரணங்கள் முதலியன) 233

வர்த்தமானக் குறிப்புகள்............. 239

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

ஜநவிநோதிநி.

இல. 10.] அக்டோபர்மீ 1890. [புஸ்த. XXI.

மனிதர் புகழ்பெறுவதெப்படி ?

ஒருவன் எந்தவிஷயத்திலாவது பிரவர்த்திக்கும்போது இடம் பொருள் ஏவல் முதலிய துணைக்கருவிகள் தனக்கிராமையினாலாயினும், தான்செய்யும் கருமத்திற்கு விரோதிகள் பலரிருப்பதனாலாயினும், தன்னுடைய எண்ணம் நிறைவேறாமற் போகும்போலிருக்குமானால் அப்படிப்பட்டசமயத்திலே, தான்கொள்ளும் எண்ணம் தன் மனச்சாட்சிக்கு ஏற்கச் சரியானதாயிருக்குமாயின், இடையூறுகளுக்கு எவ்வளவும் மனங்கலங்காமல் உயிரையும் ஒருபொருளெனமதியாமலே நின்றநிலையில் நிற்கவேண்டும். அவ்வாறுநின்று தங்கருத்தைச்சாதிப்போரே உயர்ந்தவராவார். அப்படிச்செய்வதுதான் ஆண்தன்மை. நாம் செய்யமுயலும் யாதொருகருமத்திற்கு இடையூறுகள்வந்தால்மாத்திரம் அவற்றையெல்லாங்கடந்து நம்முடைய எண்ணத்தைஇறுதியில் நிறைவேற்றிக்கொள்ளும்போது நமக்குப்பேரானந்தம் விளையும். அங்ஙனமன்றி எவ்வித இடையூறுமில்லாமலே யாதொருகருமத்தை நாம் முடித்துக்கொள்வோமாயின் அது எவ்வளவு சிறந்ததாயிருக்கினும் அதனாலாகிய சந்தோஷம் நமக்கு எவ்வளவும் உண்டாகமாட்டாது. சர்வகலாசாலைச் சங்கத்தவர்களால் வருடந்தோறும் நடத்தப்படும் பரீட்சைகளில் ஏதேனும் ஒன்றுக்கு ஒருவித்தியார்த்திபோவதாய் உத்தேசிக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அவ்வித்தியார்த்தி மெய்வருந்தி அயர்விலாஊக்கத்துடன் தன்னுடைய பாடங்களைச்சிந்தித்துப் பரீட்சையில் தேறுவானாகில் அவனுக்கு அதனாலாகியமகிழ்ச்சியுண்டாகாமற்போகாது. வேறொரு வித்தியார்த்தி பரீட்சாகாலங்களிலே ஏதோ வியாதியினாலாவது சிரமைகுறைவினாலாவது இரண்டொருதடவை பரீட்சையில் தவறிப்போயும் மனத்தளர்ச்சியடையாமல் முன்னிலும் அதிகசிரத்தையோடு மெய்வருந்தியுழன்று மூன்றாவதுதடவை பரீட்சையில் தேறுவானாகில் அவனுக்கு, முதன்முறையிலேயே பரீட்சையில் தேறிய ஒருவனுக்கிருக்கும் சந்தோஷத்தைவிட நூறுமடங்கு அதிகசந்தோஷமுண்டாகுமென்பதற்கையமில்லை. இவ்வாறு எவ்வளவும் மெய்வருந்திவாசிக்காமலே பரீட்சாகாலத்தில் வேறொருவித்தியார்த்தி எழுதிக்கொண்டிருக்கும் ப

...யபபார்த்துக் கள்ளத்தனமாய் எழுதியாவது, வினாப்பத்திரி
...த்தமாய்வரும் அச்சுயந்திரசாலையிலுள்ளோரைக் கைவசப்
...கொண்டு அவைகளை முன்னே தெரிந்துகொண்டாவது,
...ான்ற பலவகையான தீயொழுக்கங்களினாலாவது ஒருவன்ப
...சையில்தேறவுங்கூடும். ஆனால் அப்படிப்பட்ட ஒருவன் மானு
...த்தையும் ஆண்தன்மையையும் இழந்து புன்னெறியினாலே அ
...யும் ஜெயம் அவனுக்கு எவ்வளவும் அகத்தில் இன்பத்தை நல்க
...ாட்டாது.

ஆகையால்; யாதொருகருமத்தை நாம் தொடங்கும்போது அது முடியுமளவும் எவ்வகையான துன்பங்கள் வரினும் அவையெல்லாம் பிறகு காரியசித்தியினால்வரும் மகிழ்ச்சியை அதிகப்படுத்துவதற்கேற்ற கருவிகளேயாகுமென்னுந் துணிவு ஒவ்வொருவருக்கும் இருத்தல்வேண்டும்.

“இன்னாமையின்பமெனக்கொளினாகுந்தன்
னொன்னார்விழையுஞ்சிறப்பு.”

எவனொருவன் துன்பத்தை இன்பமாக நினைக்கிறானோ அவனுக்குப் பகைவராலே நன்கு மதிக்கப்படும் சிறப்புண்டாகுமென்று தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் உறுதிமொழி கூறியிருக்கின்றனர். இவ்விஷயத்தை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஏனெனில், யாதொரு நற்காரியத்தைச்செய்ய நாம் தொடங்குகையில் ஏதேனும் ஒரு இடையூறு வருமாயின் உடனே அதற்கஞ்சி மனத்தளர்ச்சியடையும் இயல்பு நமக்கிருக்குமாயின் எவ்வித நன்மையையும் செய்வதற்கு நம்மால் இயலாமலேபோய்விடும். நமக்கு முன்னிருந்த சில தீரபுருஷர்கள் இடையூறுகளுக் கஞ்சித் தம்முடைய கருத்தைப் பலமுகத்தாலும் முயன்று சாதிக்காமல் விட்டிருந் திருப்பாராயின், இப்போது நாம் அடையும் சுகங்களில் பலவற்றை இழந்தவர்களாவோம். இவ்விஷயத்திற்குச் சில உதாரணங்க ளெடுத்துக்காட்டுகிறோம்:—

1. நாம் வசிக்கும் இப்பூமி சலனமில்லாமல் நின்றநிலையிலேயேயிருக்கிறதென்றும், சூரியன் முதலியகிரகங்களெல்லாம் இதைச்சுற்றியோடுகின்றனவென்றும், நெடுங்காலமாக உலகினர்நம்பியிருந்தனர். அப்படியிருக்க, (Golileo) கலிலியோ என்னும் வித்வசிரோமணியொருவர் ஜனங்கள் அவ்வாறு கொண்டிருந்த அபிப்பிராயம் பிழையானதென்றும், சலனமற்று நின்றநிலையில் நிற்பது சூரியன்தானென்றும், அதைச்சுற்றி ஏனைய கிரகங்களெல்லாம் போகின்றனவென்றும், நாம் வசிக்கும் இப்பூமியும் அதைச்சுற்றி வருஷத்துக்கொருமுறை வருகிறதென்றும் சிலபிரமாணங்களினாலே பிரசித்தஞ்செய்தபோது, “சூரியன் உதயமாகின்றான்; சூரியன் அஸ்தமிக்கின்றான்.” என்னுஞ் சொற்றொடர்கள் அனாதியாய் உலகத்தில் வழங்கிவர அதற்குநேர்மாறாக இவர் இவ்வாறுகூறுவது முற்றும் பொய்யென்று

அக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்த பாதிரிமார் முதலியபலரும் அவரைப் பலவாறாக ஏளனம் செய்ததுமன்றி அவரைத்தம்முடைய கருத்தை மாற்றிக்கொள்ளும்படி பலமுகத்தாலும் இம்சித்தும்வந்தார்கள். ஒருநாள் பாதிரிமார் அவரைச்சிறைச்சாலையிலடைத்து நெடுநேரம் மண்டியிட்டு முழங்காலால் நிற்கும்படி இம்சித்து, அவர்பிரசித்தஞ்செய்தவிஷயம் பொய்யென்றுசொல்லும்படி அவரைநிர்ப்பந்திக்க, அப்புருஷோத்தமர் தமக்கு ஒருவரும் உதவியில்லாமையினாலே அவர்களுடைய கொடுந்தண்டனைக்கு உட்பட்டுத் துன்பத்தைப்பொறுக்காதவராகி, "நீங்கள் என்னை எவ்வளவு இம்சித்தாலுஞ்சரி, பூமி சலனமற்றுநின்ற நிலையில்தானிருக்கிறதென்று என் மனச்சாட்சிக்கு விரோதமாக உங்களுக்கஞ்சி நான் சொன்னாலுஞ்சரி, பூமி சலித்துக்கொண்டுதானிருக்கிறது, அதை உருளாமலிருக்கச்செய்ய ஒருவராலும் முடியாது." என்று பொருள்படக்கூறியதாக அவருடையசரித்திரம் சாட்சிபகர்கின்றது.

2. பூமி தட்டையாயிருக்கிறதென்று நெடுங்காலம் நம்பியிருந்த ஜனங்களுக்கு(Columbus)கொலம்பஸ்என்னும் விவேகியானவர், பூமி உருண்டையாயிருக்கிறதென்றும், ஒரு இடத்திலிருந்துயாத்திரைசெய்துகொண்டே பூமி முழுவதும்போனால்மறுபடியும்அவ்விடத்திற்கே வந்து சேரலாமென்றும், அதுவரையில் ஜனங்களுக்குத்தெரிந்திராத ஒரு பெரியபிரதேசம் பூமியின் மற்றொருபுறத்திலே யிருக்கலாமென்றும் அனேக பிரமாணங்களினாலே தெரிவித்தும் சிறந்த அரசர் முதல் சாதாரணகுடியானவன் ஈறாகவும், மஹாவித்வான்முதல் கேவலம் நிரட்சரகுட்சி யிறுதியாகவுமுள்ளயாவரும் அவரை ஏளனம் செய்து கைகொட்டிநகைத்தார்கள். பூமி உருண்டையாயிருக்குமானால் பூமியின் மற்றொருபுறத்திலே வசிப்போர் தலைகீழாகவும் கால் மேலாகவுந்தான் நடப்பார்களோ? என்றும், மலை மரங் கொடி புல்லாதிகள் தலை கீழாகவும் வளருமோ? என்றும் பலவகையான வினாக்களையெல்லாம் அவர்கள்கேட்டபோது அவற்றிற்கு கொலம்பஸ் என்பவர் தகுந்த விடைகூறியும், தாங்கள்நெடுங்காலம்கொண்டிருந்த அபிப்பிராயத்திற்கு விரோதமாக நூதன அபிப்பிராயங்களைக்கேட்கவும்மனமில்லாமல்யாவரும் அவ்விஷயத்தில் அருவருப்பு கொண்டார்கள்.

3. தேகமுழுவதும் பரவியிருக்கும் உதிரம் நின்ற நிலையிலேயே எங்கும் தங்கியிருந்து உறுப்புக்களுக்கு உதவிபுரிந்து வருகிறதென நெடுநாளாய் நம்பியிருந்த அனேக ஐரோப்பியர்களுக்கு(Dr Harvey) டாக்டர் ஹார்வியென்னும் பண்டிதோத்தமர் இருதயத்தினின்றும் உதிரம் தேகமுழுவதும் ஓடிக்கொண்டேயிருக்கிறதென்றும், அவ்வாறுஓடிக்கொண்டு போகும்போதுதான் அது அந்தந்த உறுப்புகளுக்கு அன்னபானாதிகளின் சாராம்சத்தைத் தருகிறதென்றும், அது ஓடாமல்நின்றவுடனே பிராணன் நீங்குகிறதென்றும்பல பிரமாணங்களினாலே பிரசித்தப்படுத்தினார். அக்காலத்திருந்த சாஸ்திர விற்பனர்களு

ம் தாங்கள் கொண்டிருந்த நெடுநாளைய நம்பிக்கைக்கு இவர் கூறிய விஷயம் முரண்படுகிறதென்றஞ்சி அவனை நிந்திக்கத் தலைப்பட்டனர். மற்றும் அனேகர் அவனிடத்தில் துவேஷம் பாராட்டினர். அப்படியிருந்தும் சித்த சமாதானத்துடன் அவர் தம்முடைய கோட்பாட்டைக் கடைப்பிடித்து வந்தமையால் பிறகு நாளாவர்த்தியில் ஜனங்களுக்கே அவ்வுண்மை விளங்கி அவனை நன்குமதித்தார்கள்.

4. திருஷ்டிசாஸ்திரத்தைப்பற்றிய சில அருமையான உண்மைகளை (Roger Bacon) ராஜர் பேக்கன் என்பவர் முதலில் பிரசித்தஞ்செய்தபோது அவனைப் பேய்பிடித்திருப்பதனால் மருள்கொண்டு ஏதோ சிலவற்றைப் பிதற்றுகிறானென்று பாதிரிமார் முதலிய பலரும் அவனை நிந்தித்துச் சிலகாலம்வரையில் சிறைச்சாலையில் அடைத்துவைத்திருந்தார்கள். அவரோ அவர்களுடைய கலகங்களுக்கு எவ்வளவும் இளைக்கவில்லை.

5. உலகம் உண்டானது முதற்கொண்டு சிலைகளிலும் மரங்களிலும் ஓலைகளிலும் தோல்களிலும் எழுதிப் படித்துவந்த ஜனங்களுக்கு அச்சுயந்திர வித்தையை உண்டாக்கிக் காட்டிய (John Faust) ஜான்பாஸ்ட் என்பவனைக் கிறிஸ்தவப் பாதிரிகளும் ஏனையோரும் அல்லற்படுத்தியது இவ்வளவு அவ்வளவல்ல. அவர் ஒரு நொடியிலே புஸ்தகம் ஒன்றுக்கு அனேக பிரதிகளைத் திவ்வியமான எழுத்துக்களினாலே சித்தஞ்செய்து விடுகிறபடியால் அவருக்கு ஏதோ ஒருவகையான பிசாசு கைவசமாயிருக்கவேண்டுமென்றும், இவன் பிசாசுக்குத் தோழனாகையினாலே சாதுசங்கப்பழக்கத்திற்கு யோக்கியனல்லனென்றும், அவரிடத்திலிருந்த அச்சுவேலைக்குரிய ஆயுதங்களை அப்பிசாசின் உச்சாடனத்திற்குரிய கருவிகளென்றும் பலவாறாக அவனை நிந்தித்துத் துன்பப்படுத்தினார்கள். தங்களுடைய விவிலிய நூலை அருமையாகவைத்திருந்தபடியால் ஜனங்கள் தங்களிடத்தில் பாராட்டிவந்த மரியாதை முதலிய யாவற்றையும், அந்நூலுக்கு அனேக பிரதிகளை ஒரு நொடியில் உண்டாக்கி இம் மஹாபாபி கெடுத்து விடுகிறானென்று அவனைச் சபிக்கவும் கொல்லவுந் துணிந்தார்கள்.

6. அம்மை குத்துவதற்கேற்ற சூட்சியை (Dr. Jenner) டாக்டர் ஜெனர் என்னும் சாஸ்திரவிற்பனர் பிரதமத்தில் கண்டுபிடித்தபோது சாஸ்திர பண்டிதர்களுங்கூட அவனைப் பரிஹாசம் பண்ணினார்கள்.

இவ்வாறே கால அளவைக்கருவியாகிய கடிகாரங்களிலே ஆசிலைபோல் ஆடிக்கொண்டிருக்கும் பெண்டுலம் என்னும் ஒரு உறுப்பை யுக்தியினால் பிரதமத்தில் கண்டுபிடித்த மதியூகியையும், நீராவியந்திரத்தை ஆதியில் உண்டுபண்ணிய விவேகியையும், உலகோபகாரார்த்தமான இவைபோன்ற அளவிறந்த சாஸ்திர உண்மைகளைப் பிரதமத்தில் கண்டுபிடித்த ஒவ்வொருவனையும் அந்தந்தக் காலத்திலிருந்த பிரஜைகள் சும்மாவிட்டிலர். அவ்வாறிருந்தும், அவர்கள் யாவரும் ஈஸ்வரா

நுக்கிரகத்தினாலே தம்முடைய புத்திக்குச் சரியென்று விளங்கிய விஷயத்தைச் சாதிக்காமல் விட்டிலர். இடையூறுகளுக்கு எவ்வளவும் அவர்கள் பின்னிட்டிலர். அம்மஹாபுருஷர்களை நாம் அனைவரும் உண்ணு நீரினும் உயிரினும் உவக்கவேண்டுவதன்றோ? இவர்களெல்லாம் துன்பங்களுக்கு எவ்வளவும் மனஞ்சலியாமல் மனோதிடமடைந்திருந்த காரணத்தினால்தான் இன்றளவும் புகழுடம்புபெற்று யாவராலும் நன்குமதிக்கப்பட்டு வருகின்றனர்.

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.”

என்னும் மேலோர் வாக்கியத்திற்குச் சான்றாயுள்ளவர்களே புருஷோத்தமர்களெனப்படுவர். இவர்களைப்போல் கலங்காநெஞ்சமுடையவராகியும் உயிரையும் ஒருதுச்சமாக நினைப்பவராயுமுள்ளோர் யாரோ அவர்களே பெரியோரெனப் பெயர்பெற்றுப் புகழ்பெறுதற்குரியவராவார்கள்.

“தோன்றிற்புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.”

ஒருவன் பிறக்கவேண்டுமானால் புகழுக்கு ஹேதுவாகிய குணங்களோடு பிறக்கவேண்டும். அப்படிப்பட்ட குணங்களில்லாமற் பிறப்பதைவிடப் பிறவாதிருத்தலே உத்தமம்.

நடுவுநிலைமை.

ஒருவிஷயத்தின் யுக்தாயுக்தத்தை யோசிக்கையில் நாம் நடுவுநிலைமையாயிருந்து ஆராய்ச்சிசெய்த பின்னரே ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். நடுவுநிலைமையென்னும் சற்குணம் ஒன்றைக்காட்டிலும் கல்விக்கு அணிகலம் பிறிதொன்றுள்ளதாக எமக்குத்தோன்றவில்லை. பகுத்தறிவை விர்த்திசெய்து அதன்மூலமாக அஞ்ஞானத்தை யகற்றுவதே கல்வியினாலாகிய பெரும்பயனென்போமாகில், பகுத்தறிவின் நல்லியக்கமாகிய நடுவுநிலைமையே ஒருவன் கல்வியினாலடையத்தக்க பெரும்பிரயோசனமென்பது சொல்லாமேயமையும்.

“கேடும்பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.”

அவரவர்செய்த தீவினைக்கேற்றவாறு துன்பங்களும் நல்வினைக்கேற்றவாறு இன்பங்களும் அவரவர்களுக்கு இம்மையில் விளைந்துகொண்டேவருகிறபடியால் மனதறியப்பாரபட்சமாய் ஒருவிஷயத்தைத்தீர்மானிப்பதனால் அவர்கள் இம்மையில் அடையப்போகும் பயன் ஒன்றுமேயில்லையாதலின் அங்ஙனம் ஒருவரும் செய்யாதிருத்தலே ந

லமென்றும், அதுவே கல்விகேள்வியிற்சிறந்த பெரியோர்க்குஅணிக
லமென்றும் பொருள்படத் தெய்வப்புலவர் தமது பொதுமறையிற்
கூறியிருக்கின்றனர். ஆகையால், நடுவுநிலைமைகெடுவதனாலேஒருவன்
பெரும்பயனடைவானாயினும் நடுவுநிலைமை கெடாமையினாலே ஒரு
வன் பெரும்பயனை யிழப்பானாயினும் அப்பெருக்கத்தையுங்கேட்டை
யும் ஒருபொருளெனமதியாமல் ஒவ்வொருவனும் நடுவுநிலைமையைக்
கடைப்பிடித்தொழுகவேண்டுமென்பது துணிபு.

முற்காலத்திலே இங்கிலாண்ட்தேசத்தில் அரசாண்டுவந்த சில
ஆங்கிலேயமன்னர்கள் தாம் பகையரசரை வென்றதற்குச்சின்னமா
க அவர்களுடைய இராஜதானிப்பட்டணத்தின் ஓர் புறத்திலே நா
ன்கு பிரதானபாதைகள்வந்து ஒன்றுப்கூடுமிடத்தில் ஜயலட்சுமி
யென்னும் தேவதைக்கு அறிகுறியாக அழகான ஒருபிரதிமையைச்
செய்து உயர்ந்த மேடையின்மேல் வைத்திருந்தார்கள். அப்பிரதி
மை வலதுகரத்தில் ஒரு ஈட்டியைப்பிடித்துக்கொண்டும் இடதுகரத்
தில் ஒரு கேடகத்தைத் தாங்கிக்கொண்டும் அதிக அழகாக நி
ன்றுகொண்டிருந்தது. அக்கேடகத்தின் வெளிப்புறத்திற்குப் பொ
ன்தகடடித்தும் உட்புறத்திற்கு வெள்ளித்தகடடித்துமிருந்தன. ஒ
ருநாள் இரண்டுபோர்வீரர்கள் ஆயுதபாணிகளாய் அஸ்வாரூடராக
வெவ்வேறு ஊர்களினின்றும் ஒருவன் கிழக்குமுகமாகவும் மற்றொரு
வன் மேற்குமுகமாகவும் நோக்கி யாத்திரைசெய்துகொண்டே ஏக
காலத்தில் அப்பிரதிமையின்மேடையண்டை ஒருவன் முன்புறமாக
வும் மற்றொருவன் பின்புறமாகவும் வந்துநின்றார்கள். அப்பிரதிமை
யை அவர்கள் அதற்குமுன் ஒருபோதும் கண்டிலராதலின் அதன்
வேலைத்திறத்தைப்பார்த்து வியந்துகொண்டே நின்றார்கள். அத்த
ருணத்தில் அப்பிரதிமையின் முன்பக்கத்தைப்பார்த்து நின்றவீரன்
"இதென்ன ஆச்சரியம்! எவ்வளவுங் காவலில்லாமலே பொற்கேட
கம் இவ்வளவு பகிரங்கமாக இங்கு வைக்கப்பட்டிருக்கிறதே! மாற்று
யர்ந்த இப்பொற்கேடகம் மஹா பளபளப்பாயிருக்கிறது!" என்று
சொல்லிவியந்துகொண்டிருந்தான். பின்புறத்தில் அப்பிரதிமையின்
கையிலிருந்த கேடகத்தின் மற்றொருபுறத்தைப் பார்த்துக்கொண்டு
நின்றபோர்வீரன் "இவ்வளவு திவ்வியமான பிரதிமையை யான் எங்
குங்கண்டதில்லை, இவ்வளவு அருமையான சொக்க வெள்ளியினாலமைந்த இக்கேடகம் பகிரங்கமான இவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்
கிறதே! இதை யாராவது அபகரித்துக்கொண்டுபோகார்களா?" என்
று சொல்லிவியந்துக்கொண்டிருந்தான். அப்பிரதிமையும் அதுவைத்
திருந்தமேடையும் மிகவும் அகன்றும் உயர்ந்துமிருந்தபடியால் அப்
போர்வீரர் ஒருவரையொருவர்பார்க்கக்கூடவில்லை. ஆயினும், அப்பி
ரதிமையின் முன்புறமாகநின்றவன் அதன்கேடகம் பொன்னாற்செய்
யப்பட்டதென்று கூறியசொற்களை அப்பிரதிமையின் பின்புறமாகநி
ன்றவீரன்கேட்டு "நீபோனாயா? உனக்குக் கண்தெரியவில்லையா?

வெள்ளியைப் பொன்னென்று மயங்குகிருயே?" என்று எளனஞ் செய்தான். அதுகேட்டு, முன்புறமாகநின்ற போர்வீரன் "ஓப்! குருடன் நானு? நீயா? பத்தரைமாற்றுத்தங்கம் ஜொலித்துக்கொண்டிருக்க வெள்ளி என்கிருயே, சவாஸ்! உன்கண்ணேகண், கண்படைத்தால் இப்படியல்லவோ படைக்கவேண்டும்." என்று பரிஹாசஞ்செய்தான். இவ்வாறு ஒருவனையொருவர் பரிஹாசஞ்செய்ய இருவருக்குங் கோபம் மூண்டுவிட்டபடியால் அவர்கள் ஒருவரோடொருவர் ஈட்டிகளைக்கொண்டு உக்கிரமாய்ப் போர்புரிந்தார்கள். அவ்விருவரும் சற்றேறக்குறையச் சமமான வீரர்களானதால் சீக்கிரம் ஜயாபஜயம் தெரியாமையினுலே இருவரும் உதிரவெள்ளத்தில்நீந்தி இளைப்படைந்து மெய்மறந்து சிறிதுநேரம் கீழேவிழுந்திருந்தார்கள். அந்நகரத்தில்குருக்களாயும் வைத்தியராயுமிருந்தஒருவர் அவ்வழியாய்ப்போகநேர்ந்தபோது அவ்விருவருடைய பரிதாபமான நிலைமையைக்கண்டு உடனே காட்டிலிருந்த ஏதோ சிலமூலிகைகளைக்கொண்டு அவர்களுடைய காயங்களினின்றும் பிரவாகம்போல் பெருகிக்கொண்டிருந்த உதிரத்தைநிறுத்தி அவர்களுக்குச்சிகிச்சைசெய்தார். சிறிதுநேரத்திலெல்லாம் அவ்விருவருக்கும் பிரக்ஞைவந்தவுடனே குரு அவ்விருவரையும்பார்த்து, "நீங்கள் இவ்வளவுகோபாவேசங்கொண்டுபோர்புரிந்ததற்குக் காரணம்யாது? தெய்வசங்கற்பத்தால் நான் இவ்வழிவந்திரேனுயின் இந்நேரம் உங்களுடைய ஆத்மாக்கள் பரமண்டலத்திலேயல்லவோ போய்ச்சேர்ந்திருக்கவேண்டும்?" என்றார். அதைக்கேட்ட அவ்விரண்டுவீரர்களும் தத்தமக்குண்டான கோபாவேசத்தின் காரணத்தைக்கூறினர்கள். அதைக்கேட்டு குரு "அந்தோ! அந்தோ! நீங்கள் இருவருங்கண்டபடி கூறியது சரிதான். ஆனால், அவ்வாறே ஒவ்வொருவரும் சாதித்ததுமாத்திரம் பிழை. ஒவ்வொருவரும் அப்பிரதிமையின் மற்றொருபுறத்தையும் போய்ப்பார்த்திருந்தால் இவ்வளவு கோபாவேசமும் ஹானியும் விளைந்திராதே." என்று பெருமூச்செறிந்தார். இதைக்கேட்ட அவ்விரண்டு போர்வீரர்களும் அப்பிரதிமையின் மற்றொரு பக்கத்தைப்பார்த்து உண்மை தெரிந்துகொண்டு வெட்கமடைந்து துக்கப்பட்டார்கள். அப்போது அக்குரு அவர்களைநோக்கி, "எந்த விஷயத்தையும் தீர இருதிறத்திலும் விசாரிக்காமல் ஒரு சார்பாயிருந்து தீர்மானித்து விடுவது பேராபத்துக்கிடமென்னும் அரியநீதியை இப்பிரதிமை உங்கள் வாயிலாக இன்று உலகத்தார்க்குக் கற்பித்தது." என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

மேலே காட்டிய சிறு கதை நடுவுநிலைமை தவறினோர்க்கு விளையுங்கேடு இத்திறத்ததென்பதை நன்றாய் விளக்குகிறதல்லவா? அது நிற்க.

ஒருபொருளைத் தீரவிசாரிப்பதற்கு முன்னமே யாதொருகாரணமுமில்லாமலே அப்பொருளினிடத்து விருப்பும்வெறுப்புமுண்டாவ

து சிலர்க்கு இயற்கை. இதுதுர்க்குணங்கள் யாவற்றினும் நடுநாயகம். ஒருபொருளின் யுக்தாயுக்தத்தை ஆராய்ந்தறிவதற்கு முன்னமே அதனிடத்து வெறுப்புண்டாகுமாயின் பிறகு நாம் எவ்வளவு நன்றாய் ஆராய்ச்சி செய்யினும் அப்பொருளிடத்துள்ள குணங்கள் தோன்றமாட்டா. அவ்வாறே ஒரு பொருளின் குணாகுணங்களைத் தெளிவதற்கு முன்னமே அதனிடத்து விருப்புண்டாகுமாயின் பிறகு நாம் எவ்வளவு நன்றாய் ஆராய்ந்திடினும் அதனிடத்துள்ள துர்க்குணங்கள் நமக்குப் புலப்படமாட்டா. ஆகையால், அப்பொருளின் உண்மையின்னதென விளங்காது. விருப்பும் வெறுப்பும் நடுவு நிலைமையோடு கூடிய ஆராய்ச்சிக்குப் பிற்பட்டிருக்க வேண்டுமேயன்றி முற்பட்டிருக்கலாகாது. இவ்விஷயங்களையெல்லா மமைத்தே மேலோர் நிரம்பவும் அழகுபெற அடியில்வருமாறு கூறியிருக்கின்றனர்:—

"காய்த்தலுவத்தலகற்றி யொருபொருட்கண்
ஆய்தலறிவுடையார்கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந்தோன்றாதாகுமுவப்பதன்கண்
குற்றமுந்தோன்றாக்கெடும்."

குற்றத்தையே நாடுமியல்பு சிலர்க்கும், குணத்தையே நாடுமியல்பு சிலர்க்கு மிருப்பது நாம் உலகத்திற் காண்கிறோம். அத்தகையோர் நடுவு நிலைமையோடு ஒருவிஷயத்தில் பிரவர்த்திக்க முற்றும் தகுதியற்றவர். குற்றத்தையே நாடும் இயல்பு பெற்றிருந்த ஒருவனைப்பற்றிய ஓர் விர்த்தாந்தத்தை அடியில் எழுதுகிறோம்:—

நெடுநாளாக வறுமைப்பிணிற் பீடிக்கப்பட்டுவந்த புலவரொருவர் ஏதேனும் சன்மானம் பெறலாமெனக்கருதி ஒரு தனவானை நோக்கிச் சென்றார். அத்தனவான் ஒன்றுங்கொடாத உலோபியானபடியால் அவ்வித்துவானைக் கண்டமாத்திரத்தில் அருவருப்போடு மனநடுக்கத்துடன் அவரைப்பார்க்க அவர் அவனுடையமுகச்சுளிப்பை ஒருபொருளென மதியாமல் "சீருலாவிய காமதேனுவே தாருவே சிந்தாமணிக்கு நிகரே, செப்பும் வசனத்தரிச்சந்த்ரனே." என்று அவனை வாழ்த்திக்கவிபாட ஆரம்பித்தவுடனே அத்தனிகன் அவரைப்பார்த்து, "ஓய்! உன் கவியை நிறுத்து, என்னை ஏன் இப்படி வயாரத்திட்டுகிறாய்! என்னைப்பசுமாடென்றும் மரமென்றும் கல்லென்றும் நிரேதுவாய் வைததுமன்றி, அரிச்சந்திரனென்றும் என்னை வயார நிந்தித்தாயே! நான் யார்க்கடிமையானேன்? என் மனைவியை யார்க்கு நான் விற்றேன்? இப்படிப்பட்ட அடாதமொழிகளால் என்வீடேறிவந்து என்னை வலியத்திட்டியதற்கு உன்னை என்செய்தால் தீரும்." என்று கோபாவேசத்தோடு கூற, அப்புலவர் நடுநடுங்கி கெர்ப்பங்கலங்கி, ஐயோ! இப்படிப்பட்ட விபரீத புத்தியுள்ள ஒருவனும் ஈஸ்வரசிருஷ்ட்டியி லிருக்கின்றானே! என்றுநினைந்து தன் விதியை நொந்துகொண்டே நடராஜர் சந்நிதானத்திற்கு நடந்த விர்த்தாந்தங்களை யெல்லாம் அடியில் வருமாறு முறையிட்டுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தனர்:—

"வாருநீர்யாரென்னவித்துவானென்ன லும்மதிமோசம்வந்ததென்றே
வாய்குளறிமெய்யெலாமிகநடுக்குற்றுநீர்வந்தகாரியமேதெனச்
சீருலாவியகாமதேனுவேதாருவேசிந்தாமணிக்குநிகரே
செப்பும்வசனத்தரிச்சந்த்ரனேயெனலுஞ்சினத்திருகணுஞ்சிவந்தே
பாரைநீமோசெல்மரமென்றுசொன்னதுமலாலரிச்சந்த்ரனென்றே [றேன்
யடாதசொற்சொன்னையே யார்க்கடிமை யாகினேனூர்கையிற்பெண்விற்
நீருமோவிந்தவசையென்றுரைசெய்வெருகொடியதீயனைப்பாடிநொந்தேன்
றிருமன்றுணடுநின்றுநடமொன்றுபுரிகின்றதென்றில்லைநடராஜனே."

யாவரும் உவக்கத்தக்க காமதேனு, சிந்தாமணி, கற்பகத்தரு, அரிச்சந்திரன் என்னும் பதங்களைக் கேட்டவுடனே அவற்றையெல்லாங் குற்றங்களாக எண்ணிய அத்தனிகனைப்போன்றவர்கள் உலகத்தில் அநேகர் உளர். அத்தகையோர் எவ்வளவும் நடுவுநிலைமைக்கு அர்ஹரேயன்று.

சிலர் ஒரு பொருளின் துர்க்குணங்களை நாடாது அதன் சற்குணங்களை நாடு மியல்புடையராயிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் மிகச் சிறு பான்மையாகவேயிருப்பார்கள். ஒரு அரசனைப் பார்க்கச் சென்றவித்வானொருவர் கருநிறம்பெற்றிருந்தாராதலின் அவனைக்கண்டமாத்திரத்தில் செல்வச்செருக்கின் மேலீட்டினால் அவ்வரசன் "அண்டங்காக்கையே." வருக என்றான். அதைக்கேட்டபோது அப்புலவர் எவ்வளவுஞ் சினங்கொள்ளாது "ஓ! மகாப்பிரபுவே! அண்டங்காக்கை யென்னுஞ் சொற்றொடர் தங்களுக்குரியதேயன்றி எனக்குரியதேயன்று என்றார்." அண்டமாகிய உலகத்தைக் காக்குதல் அரசனுடைய தொழிலென்பது அவருடைய கருத்து. இவ்வாறே குற்றங்களையெல்லாங் குணமாகவே பாவிப்பது நல்லோரியல்பு தானென்று மேலோர் பலவாறு வியந்தபோதிலும், குற்றமின்னது, குணமின்னது என்பதை நடுவுநிலைமையுடன் அறிவது கூடாதென்று எவருங்கூறவில்லை. நடுவுநிலைமையுடன் யாதொரு விஷயத்தின் யுக்தாயுக்தத்தையும் குறைகுணங்களையுந் தெரிந்துகொண்ட பின்னர் குற்றங்களை யெல்லாம் வேண்டுமானால் ஒருவன் குணமாகப் பாவிக்கட்டும். அங்ஙனம் பாவித்தல் ஒருவகையான லௌகிகதந்திரம். அதனால் பெரும்பாலும் சுகம் விளைதற் கேதுவுண்டு. ஆனால் இதைச்சாக்கிட்டுக்கொண்டு எவரும் நடுவுநிலைமையைக் கைசோரவிடாம விருப்பாராக.

ஓர் கரடியின் கதை.

25-ம். அத்தியாயம்.

மந்தானகனுடைய பேரப்பிள்ளைகள்.

விக்கிரமவீரன் செல்வியாகிய தன்மனைவியின் அடிநாளைய வாசஸ்தலத்தையும் அது பிடிபட்ட விஷயத்தையும் கப்பலில் அதுசெய்த காரியங்களை

யும்பற்றித் தெரிந்துகொண்டபிறகு முன்னிலும் அதனிடத்தில் அதிகநேசம் பாராட்டியது. அதன் அழகைப்பற்றி விக்கிரமவீரன் மிகவும் இறும்பூதெய்தி, தன்னுடைய பிதாவாகிய மந்தானகனும் மாதாவாகிய உத்தமஜீவியும் சகோதரனாகிய சுமுகனும் தனக்கு இவ்வளவு அழகிற்சிறந்த யௌவனமுள்ளமனைவி வாய்த்திருப்பதை யறிந்தால் எவ்வளவு சந்தோஷங்கொள்வார்களென்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டது. அடுத்த இளவேனிற்பருவ ஆரம்பத்தில் மரங்களிலே இலைகள் பச்சென்று தழைப்பதற்கு முன்பாகவும், தோட்டத்தில் இங்குமங்கும் சிலபுஷ்பங்கள்மாத்திர மிருந்தபோதும், விக்கிரமவீரனும் செல்வியும் ஒருசிறு ஆண்குட்டிக் கரடியை ஈன்றன. அக்குட்டி முதலில் மிகச்சிறியதாயிருந்தபடியால் அதற்குக் காயம்படப்போகிறதென்றஞ்சி விக்கிரமவீரன் அதைத்தொடவும் பயப்பட்டுக் கொண்டிருந்தது. ஆயினும், அக்குட்டி வரவரப் பெரிதாகிப் பலமடைந்தபோது அதை ஒவ்வொருவேளைகளில் மேலுங்கீழுமாகப்புரட்ட விக்கிரமவீரன் துணிவுகொண்டது. அக்குட்டிநசுங்கி ஒருவேளை இறந்துவிடப்போகிறதென்று தாயாகிய செல்விக்கு அதனிடத்தில் பயமுண்டாயிருந்ததை விக்கிரமவீரன் தெரிந்துகொண்டு, அக்குட்டி தன்தாயோடு சுகமாய்ப்படுத்துக் கொள்ளுகிறவனாயில், அதற்கு என்ன ஆபத்துவிளையுமோ என்று ஏக்கங்கொண்டிருப்பது வழக்கம். அக்குட்டி தானே நடந்துபோகவும் குழிக்குள்தவழ்ந்துவரவும் சக்திபெறுமளவும் விக்கிரமவீரன் பொறுத்திருந்து பிறகு, குமாரனிடத்தில் பிதாவுக்கு எவ்வளவு சந்தோஷமும் வாஞ்சையும் உண்டாகக்கூடுமோ அவ்வளவு அக்குட்டியினிடத்து அது அடைந்தது.

அக்குட்டிக்குத் தன்பிதாவாகிய விக்கிரமவீரன் ஜாடையைவிட மாதாவாகிய செல்வியின் ஜாடை அதிகமாயிருந்தது. ஏதேனும் வேடிக்கைகள் காட்டக் கற்றுக்கொள்வதற்கேற்ற பருவம்வர அதற்கு நெடுநாள்சென்றது. ஆனால், விளையாடுவதற்கேற்ற சிறுகுட்டியாய் அது இருந்தபடியால் விக்கிரமவீரனுக்கு அதனிடத்து எவ்வளவு அன்பிருந்ததோ அவ்வளவு அன்புடன் அத்தோட்டத்துக் காவலாளியும் அதைப்போஷித்து அதனோடு விளையாடிக்கொண்டிருந்ததுமன்றி, அடிக்கடிவந்து அக்கரடிகளோடுகூட உட்கார்ந்துகொண்டு அச்சிறுகுட்டியைத் தடவிக்கொடுத்துக் கொண்டுமிருப்பான். அக்குட்டியும் அவன்செய்துவந்த சீராட்டுக்கெல்லா மிணங்கி நாளாவர்த்தியில் கொழுத்துப் பெரிதாய்வந்தது.

அக்குட்டியின் தாயாகிய செல்வி அதைமிகவும் கவனமாய்ப்பாதுகாத்து அதன் மயிர்களை மிகவும் அழகாய்வளர்த்துவந்தது. அதன் உரோமங்கள் செல்வியின் மயிர்கள் ஆதியிலிருந்ததுபோலவே நீண்டும் கறுத்துமிருந்தபடியால் அக்குட்டியைப்பார்க்கவந்த அநேக சிறுகுழந்தைகள் அதைப்போன்ற சொக்காய் நமக்கில்லையேயென்று ஏக்கங்கொண்டன. அத்தோட்டத்து ஆள் அக்குட்டியை அடிக்கடி கையினால் எடுப்பதைப்பற்றிச் செல்விக்குமிகவும் மனவருத்தமுண்டாகி, அடிக்கடி அதைத்தொடுவதனால் அதன் மயிர் கெட்டுப்போகிறதென்று முறுமுறுத்துக்கொண்டிருப்பது வழக்கம். தோட்டக்காரன் அக்குட்டியைச்சிறிதுநேரம் எடுத்துவைத்திருந்து கீழேவிட்டபிறகு மறுபடியும் அதைப்பிடிக்கவேண்டுமானால் அதன்தேகம் முழுவதையும் நன்றாய்நக்கி அதன் மயிர்களையெல்லாம் ஒழுங்குபடுத்தவேண்டிய அவசியம்செல்விக்கிருந்தது வாஸ்தவந்தான். இதைப்பார்த்து விக்கிரமவீரன் "தொட்டதனால் என்னுடைய மயிர் ஒருபோதுங் கெட்டுப்போகவில்லையே, நீ இப்போது உன் குட்டிவிஷயமாக என் இவ்வளவு அவஸ்தைப்படுகிறாய்?" என்று கேட்டது.

தான்சொன்ன விஷயத்தை இந்தப்படி சந்தேகித்த விக்கிரமவீரனிடத்தில் செல்விக்குச்சிறிது கோபம்பிறந்து, "என்னுடைய மயிர் கெட்டுப்போகவில்லை என்றுசொல்லுகிறாய்? மகாவேடிக்கையாயிருக்கிறது." என்று கடுகடுத்துச்சொல்லியது. செல்விக்கு எந்த விஷயத்தைப்பற்றியும் தர்க்கிக்கக் சாமர்த்தியம் இல்லாமையாலே தான் நினைத்துக்கொள்ளுகிறதே சரியென்று எப்போதும் அபிப்பிராயப்படுவது வழக்கமானதையால் மறுபடியும் விக்கிரமவீரனைப் பார்த்து "அடிக்கடி குட்டியைத்தொடுவதனால் அதன்மயிர் வெகுசாய்க்கெட்டுப்போய்விடும், இப்போதே அது ஒருவாறு புருசாயிருக்கிறது." என்று வற்புறுத்திக் கூறியது.

இவ்வாறு செல்வி கடுகடுத்துப் பேசியதைப்பார்த்த விக்கிரமவீரன் இப்போது இதற்கு எரிச்சல்வேளையாயிருக்கிறது, என்று நினைத்துக்கொண்டு வேறேவிஷயத்தைப்பற்றிப் பேசத்தொடங்கியது. விக்கிரமவீரன் தன்பாலிய மனைவியின் இஷ்டத்திற்கு விரோதமாக ஒன்றும்பேசாமல் இருந்துவந்தது. அன்றியும், அது அசௌக்கியமாயாவது வருத்தமாயாவது இருப்பதைப்பார்க்க விக்கிரமவீரனுக்கு மனந்தாளாது; "ஒருவர்பொறை யிருவர்நட்பு" என்னும் பிரமாணப்படி அவ்விரண்டுகரடிகளும் ஒருபோதும் சண்டைபோடுவதில்லை. பிறருடைய அபிப்பிராயத்திற்குச் சிறிது இணங்கிப்போகச்செல்வி ஒருபோதும் பழக்கப்பட்டிராதபடியால் அதுதன்விருப்பத்திற்குவிரோதமாக எதாவது நேரிடுமானால் உடனே கோபித்துக்கொண்டு அவஸ்தைப்படுவது வழக்கம். வருஷத்திற்குவருஷம் விக்கிரமவீரனுடைய சாந்தகுணமும்பட்சமும் அதிகப்பட்டுக்கொண்டேவந்தது. செல்வி எதேனும் சிலவிஷயங்களில் தவறிப்போனால் அதைவிக்கிரமவீரன் எப்போதும் மன்னித்துக்கொண்டுவருவதுண்டு. இந்தநல்லகுணத்தை நாளாவர்த்தியில் செல்வியும் கற்றுக்கொண்டு சாந்தகுணம் அமையப்பெற்றது.

மழைக்காலமுழுவதும் குட்டிக்கரடி தூங்கிக்கொண்டே யிருந்தது; அதை ஒருவரும் எழுப்பவில்லை. மறுவருஷத்திலே கம்பத்தின்மேலேறுவதற்கும் பலகாரங்களுக்கெதிர்பார்ப்பதற்கும் எற்றபருவம் அதற்குவந்துவிட்டது. சிலநாளையிலே அதுபோதுமானவளையில் பெரிதானவுடனே அக்குழியில் வேறொருகுட்டிபிறந்தது; அப்போது முதல்குட்டி தனியேயிருக்கும்படி தோட்டக்காரன் அதை வேறொருபள்ளத்திற்கொண்டுபோய் விட்டான். அக்குட்டி தன்னைவிட்டு நீங்கியபோது முதலில் விக்கிரமவீரனுக்கு மனவருத்தமாயிருந்தது; ஆனால் அக்குட்டி தானிருந்த இடத்திற்கு நெடுந்தூரத்திலிராமையினாலும், அதன்குரலோசையை விக்கிரமவீரனும்செல்வியும் கேட்கக்கூடியதாயிருந்தமையினாலும், அது நன்றாய்ப்பாதுகாக்கப்பட்டு வருகிறதென்று அப்பெருங்கரடிகளுக்குத் தெரியவந்தமையினாலும் துயரம் ஒருவாறுதணிந்தது. தம்முடையகுட்டிகள் பெரிது ஆக ஆக அவற்றின்பிரிவாற்றுமை அப்பெருங்கரடிகளுக்குக் குறைந்துகொண்டேவந்தது.

விக்கிரமவீரனுக்கு இப்போது ஒருமனைவியும் குழந்தைகளும் முறையே பேசுவதற்கும்பாதுகாப்பதற்கு மிருக்கிறபடியால் சமீபத்திலிருந்த மற்றக்கரடிகளோடுகலந்து உறவாடவேண்டுமென்கிற எக்கம் அதற்குக்கிடையாது. செல்விமாத்திரம் சமீபத்திலிருந்த மற்றக்கரடிகளோடு கூடிக்குலாவிச் சந்தோஷித்துவந்தது. செல்வியானது காலையிலெழுந்தவுடனே ஆகாரம்தின்று, தன்குட்டியைக் கவனமாய்ச் சுத்திசெய்து அதன் மயிர்களைக் கோதிப்பக்குவப்படுத்தியபின், தன்குட்டி காலையில் சிறிதுநேரம் தூங்குவதற்குப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கையில், தூக்கமயக்கத்தினால் தானும் நாற்பதுதரம் இமைகொட்டித் தூக்கத்தை நன்றாய்ப் போக்கிக்கொண்டு, தினம்கிரா

திகளின்மேலுட்கார்ந்திருந்து, தோட்டத்திற்குள்யாராவது பார்க்கவருவதற்கு முன்பாகச்சினேகக்கரடிகளிலேதேனுமொன்றுடன் பேசிக்கொண்டிருப்பது வழக்கம் வேனிற்காலத்தில் மாலைப்பொழுது அதிகமாயிருந்தபடியால் அப்போதும் குழந்தை தூங்கிவிட்டபிறகு மறுபடியும்போய்ச் சினேகக் கரடிகளோடுபேச அதற்குப்பொழுதிருந்தது.

செல்வி மேலுங்கீழுமாக உலாவிக்கொண்டும், கிராதிகளுக்குச் சமீபமாக உட்கார்ந்துகொண்டும், இருந்திருந்து சிலசமயங்களில் மெல்லியகுரலோசையோடு அதுபோடும் கூச்சலையாவது சிறித் தனக்குத்தானேசெய்துகொள்ளும் சந்தடியையாவது யாரேனும் காலையில் அவ்விடத்திற்சென்று பார்ப்பார்களாகில் அதன்கருத்து இன்னதென்று புலப்படமாட்டாது. ஆனால், அதன் கூச்சல்களையெல்லாம் வெண்கரடியாவது கருங்கரடியாவது நரைத்த உரோமங்கள் அடர்ந்தகரடியாவது சமீபத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கும். அக்கரடிகளுக்குள் ஏதேனுமொன்று முன்னும்பின்னுமாக உலாவிக்கொண்டே தன் கூடின் கிராதிகளின்மூலமாகச் செல்வியை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும். ஒருகரடிக்கு மற்றொருகரடியின்பாஷை நன்றாய்த்தெரியுமென்பதற்குச் சந்தேகமில்லை.

வெண்கரடி சாதாரணமாய் எல்லாராலும் விரும்பப்படத்தக்கது. அக்கரடியானது செல்வியின் வாசஸ்தலத்திற்குச் சமீபமாகத்துருவப்பிரதேசசமுத்திர தீரங்களிலிருந்துவந்ததென்று செல்விக்குத் தெரிந்திருக்கிறபடியால், தன்னுடைய மாதாபிதாக்களையும் நண்பர்களையும் அது அறிந்திருக்கவேண்டுமென்று செல்வி நம்பியிருந்தது. ஆயினும், நிச்சயமாய்ச் சொல்லச் செல்விக்கு ஒருபோதும் சாத்தியப்படவில்லை. பயங்கரமான காடுகளில் பனியடர்ந்திருந்தபோது அவ்வெண்கரடி அத்துருவப் பிரதேசங்களிலே திரிந்துகொண்டிருந்தபடியால் கலைமான்களையும், வேனிற்காலத்தில் கறுப்பாகமாறத்தக்க மயிரையுடைய துருவப்பிரதேசச் சிறுவெண் கீரிப்பிள்ளைகள் முதலிய பிராணிகளையும் பார்த்தது அதற்குநன்றாய் ஞாபகமிருக்கிறது.

இந்தப்படி நாள் கழித்துக்கொண்டிருக்கும்போதும், விக்கிரமவீரனுக்கும் செல்விக்கும் இடையிடையே சில துன்பங்கள் நேரிடுவதுண்டு. அவைகளுக்குப் பிறக்கும் குட்டிகளுக்குள்ளே சில மிகவும் மிருதுவானவைகளானபடியால் அவற்றை எவ்வளவோ ஜாக்கிரதையாகப் பெரியகரடிகள் காப்பாற்றிக்கொண்டுவந்தும் இரண்டொன்று பாலியத்திலேயே இறந்துபோவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களிலே விக்கிரமவீரனும் செல்வியும் ஒன்றோடொன்று சமாதானம்பேசித் துக்கத்தையாற்றிக்கொண்டு சிறிதுநாள் தனியே உயிர் வாழ்ந்துவருவதுண்டு.

அக்கரடிகளுக்கு நேரிட்ட துக்கங்கள் யாவற்றினும்; தங்களுக்கு மிகவும் பிரியமாயிருந்த அத்தோட்டக்காரனுடைய மரணத்தினால் விளைந்த துக்கம் மிகப்பெரிதாயிருந்தது. ஒருதினம் அவன் அக்கரடிகளோடு கூடவே நாள்முழுவதுமிருந்து அன்றிரவு வெகுநேரம்வரையில் அவைகளைப் பிரியாமல் பொழுதுபோக்கிவிட்டு வீட்டுக்குச்சென்றான். அவ்வாறு போனவனை அக்கரடிகள் மறுபடியும் பார்க்கவேயில்லை.

அவனுடைய பிரிவாற்றாமை அக்கரடிகளுக்குப் பெருந்துக்கமாயிருந்தது. அவனைப்போல் அவ்வளவு பட்சமுள்ள சிநேகன் இனியகப்படுவது துர்லபமென்று அவைகள் நினைத்துக்கொண்டன; அவனிடத்தில் அவைகள் எவ்வளவு சிநேகம் பாராட்டியதோ அவ்வளவு சிநேகத்தை நூதனமாய் வந்த வேறொரு காவலாளியினிடத்துப் பாராட்ட அவைகளுக்கு எவ்வளவும் விருப்பமில்லை. அவன் அக்கரடிகள் விஷயத்தில் மிகவும் பட்சமாயிருந்து அவை

களுக்கு ஆகார முதலியவற்றை நன்றாய்க் கொடுத்துக்கொண்டு, முந்திய ஆளைப்போலவே சுருசுருப்பாய் அவைகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்துவந்தான்; ஆனால் அவன் பேசும் மாதிரியிலும் பார்வையிலும் குரலோசையிலும் ஏதோ வித்தியாசமிருந்தது. வாஸ்தவத்தில் வித்தியாசமிருந்ததோ என்னவோ நமக்குத் தெரியாது; ஆயினும், வித்தியாசமிருந்ததாக விக்கிரமவீரன் நினைத்துக்கொண்டது. விக்கிரமவீரன் சதா தன்மனைவியாகிய செல்வியைப்பார்த்து "நான் பார்த்த எல்லாமனிதர்களுக்குள்ளே முன்னிருந்த தோட்டக்காரனொருவனே காடிகளின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்வதிலும் அவைகளின் குணவிசேஷங்களைக்கண்டு மெச்சுவதிலும் சாமர்த்தியன்." என்று சொல்லிக்கொண்டுவரும்.

விக்கிரமவீரனும் செல்வியும் தங்களுடைய அடிநாளைய வாசஸ்தலங்களைப்பற்றி அடிக்கடி பேசிக்கொண்டுவருவதோடுகூடத் தங்களுடைய சகோதரிகளும் சகோதரர்களும் எப்படியாய் விட்டார்களோ என்று யோசித்துக் கொண்டிருக்கும். சுமுகன் என்னும் தன் இளைய சகோதரனுக்குத் தனியே ஏதேனும் ஒரு குகை ஏற்பட்டிருக்கிறதா என்றும், அதற்கு மனைவியும் குழந்தைகளுமிருக்கின்றனவா என்றும், அல்லது தூரதேசத்தில் எங்கேயாவது யாரேனும் பிடித்துவைத்துக்கொண்டிருக்கிறார்களா என்றும் தெரிந்துகொள்ள விக்கிரமவீரனுக்கு அபேட்சையிருந்திருக்கும்! ஆனால், அச்சுமுகனைப்பற்றி அது ஒன்றும் பிறகு ஒருபோதும் கேள்விப்படவேயில்லை. இச்சிங்காரத்தோட்டத்தில் நாள்கழிக்க விக்கிரமவீரன் வந்தது முதற்கொண்டு ஊரூராய் யாத்திரை பண்ணுவதும் துணிச்சலானகாரியங்களைச் செய்வதும் கிடையா.

விக்கிரமவீரன் இன்னும் சில்காலம் சௌக்கியமாயும் மனத்திருப்தியுடனும் அக்குழியிலேயே நாள்கழித்துக்கொண்டுவருகையில் அதுவும் செல்வியும் மிகவும் கிழமாய்க் கொழுத்துப்போய்விட்டபடியால் அக்கம்பத்தின்மேல் ஏறுவதற்குச் சாத்தியப்படாமற் போய்விட்டது. பிறகு கடைசியாக அவ்விரண்டுகாடிகளும் மற்றப்பிராணிகள்இருந்த இடத்தில் ஒரு பெருங்கூட்டிலே உயிர்வாழும்படி விடப்பட்டன.

அவைகள் இன்னும் அந்தரமணீகரமான சிங்காரத்தோட்டத்திலேயே நாள் கழித்துவருகையில் தங்களுடைய கடைசிகுட்டி தாங்களிருந்த குழியிலிருந்து வருகிறதைப்பார்க்க மனச்சந்துஷ்ட்டியடைந்தன.

இனி அவ்விரண்டுகாடிகளும் கிழவர்களைப்போல் அமைதியாய் ஓரிடத்திலேயேயிருந்து, ஒருவேலையும் செய்யாமல், தாங்கள் பாலியமாயிருந்தபோது காலம் நன்றாயிருந்ததென்றும், இப்போது எல்லாங் கெட்டுப்போயிற்றென்றும், ஜனங்கள் அப்போது எவ்வளவு விவேகிகளாகவும் அழகானவர்களாகவும் சந்தோஷமுள்ளவர்களாகவும் இருந்தார்களென்றும், மிருகங்களும் இப்போதிய மிருகங்களைவிட நல்லொழுக்கமுள்ளவைகளாயிருந்தனவுமன்றி இப்போதுபோலல்லாமல் சுலபத்தில் சாந்தமாயிருக்கும்படி பழக்கக்கூடியவைகளாயுமிருந்தனவென்றும் பேசிக்கொண்டு நாள்கழித்துவந்தன.

அவ்விரண்டுகாடிகளும் உட்கார்ந்துகொண்டு, பாலியர்கள் தலைகால்தெரியாமல் நடக்கிறதைப்பற்றியும் அவர்களுடைய முட்டாள்தனத்தைப்பற்றியும் தலையசைத்து ஒன்றோடொன்று பேசிக்கொண்டிருக்கும். அக்காடிகள் எப்போது பேசத்தொடங்கினாலும் "நான் பாலியமாயிருந்தபோது ஆ! ஆ! காலம் என்னமாயிருந்தது!" என்று பேசிக்கொள்ளும். அவ்விரண்டுகாடிகளும் மிகவும் வயோதிகமாகிறவரையில் உயிரோடிருந்தும் அவைகளின் அழகும்

தோற்றப்பொலிவும் கெடவில்லை. நன்றாய் வயதேறியபிறகு அவைகள் யாதொருவேதனையுமில்லாமல் மரணமடைந்தன.

செல்வியினுடைய தோலை அங்கிருந்தவர்களெடுத்துப் பக்குவப்படுத்தியபடியால் அது ஒரு அரசனுடைய அரண்மனையில் திவ்வியமான பாயாய் உபயோகப்பட்டுவந்தது. அது மஹா அழகாகவும் மிருதுவாகவும் பளபளப்பாகவுமிருந்தபடியால் இராணிகளும் அரசிளங்குமரர்களும் மிதித்து நடப்பதற்கு அது மிகவும் ஏற்றதாயிருந்தது.

ஆனால், விக்கிரமவீரனுடைய தேகத்துக்குள்ளிருந்த மாம்சமுதலியவற்றை எடுத்துவிட்டுப் பஞ்சுமுதலிய வஸ்துக்களைக்கொண்டு நிரப்பித்தோலைப் பக்குவப்படுத்தி, அதை அத்தோட்டத்திலிருந்த பிராணிகள் யாவற்றினும் மிகவும் அழகாகவும் சிரேஷ்டமாகவுமுள்ள பிராணிகளோடு சேர்த்துப் பலபொருட் காட்சிச்சாலையில் ஓரிடத்தில் வைத்திருக்கிறார்கள்.

சிங்கங்களும், புலிகளும், காண்டாமிருகங்களும், ஒட்டைகளும், எருமைகளும், பெரியயானையும், பர்வதாகாரமான நீர்யானையும் அவ்விடத்திலிருந்தன. சுற்றிலும் சுவர்களிலே கண்ணாடிப்பெட்டிகளில் நரிகளும், குரங்குகளும், கிளிகளும், ஆந்தைகளும், சிறுஜந்துக்களும், பலவகையான பட்சிகளுமிருந்தன. விக்கிரமவீரன் உயிரோடிருந்தபோது அதை எத்தனைபெயர் வந்து ஆச்சரியத்தோடுபார்த்தார்களோ அத்தனைபெயரும் அது இறந்தபிறகும் வந்து வியப்போடுபார்த்தார்கள்.

அதன் உருவத்தைப் படமெழுதிக்கொண்டு போவதற்காகச் சித்திரக்காரர்களும், அதன் சருமத்தையும் அதன்பரிமாணத்தையும் உருவமைதியையும் பரீட்சித்துப்பார்ப்பதற்காகத் தாவரசங்கமசாஸ்திரிகளும் வந்தார்கள்.

விக்கிரமவீரன் கம்பத்தின்மேல் பின்னங்காலால் சாய்ந்து நின்றுகொண்டும் காதுகளை நெளித்துக்கொண்டும் வாயைத்திறந்துகொண்டும் முன்வழக்கம்போலவே யிருப்பதை நாளைக்குங்காணலாம். ஆனால் இப்போது அதற்குப்பலகாரங்கள் போடுவார் ஒருவருமிலர்.

முற்றும்.

கண்ணாரக்கண்டதும்பொய், காதாரக்கேட்டதும்பொய், தீரவிசாரித்ததுமெய்.

(தொடர்ச்சி.)

அதுகேட்ட அரசன்-நல்லது, அப்படியானால், அக்கொலையை இவர்களிருவருமே செய்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது; அக்கொலைக்குத்தீர்வாக இவர்களிருவரையுமே சிரச்சேதம்செய்யச்சொல் என்றான். அதற்கு மந்திரி-மன்னனே! அக்கொலையை இவர்களிருவரிலொருவன்தான் செய்திருக்கவேண்டும், ஒருகொலைக்கு இருவரைக் கொலைசெய்தல் நீதியல்லவே என்றான். பிறகு அரசன் ஆலோசித்து அது நியாயந்தான், இவ்விருவரில் இன்னான்தான் கொலைசெய்தவனென்று நிச்சயிக்கக்கூடுமானால் அப்படியே நிச்சயித்துப் பின்பு இவன்தான் கொலையாளியென்று எனக்குத்தெரிவிக்கவேண்டுமென்றான். உடனே அமைச்சன் அவ்விருவரையும் ஓர்தேவாலயத்தில் அ

ழைத்துக்கொண்டுபோய், வாலிபன் முன்னமே கடவுள் சாட்சியாகவென்று சத்தியஞ்செய்திருப்பதால் அவனைக்கேட்காமல், வயோதிகனைநோக்கி, கொலையாளி வாஸ்தவத்தில் நீயேயாகில், நான்தான் இக்கொலைசெய்தவனென்று சத்தியஞ்செய்யென்றான். அவ்வயோதிகன் தேவாலயத்திற் சத்தியஞ்செய்வதற்குப் பின்னிட்டபடியால் அவன் சொல்லுகிறது பொய்யென்றறிந்துகொண்டு அவ்வாலிபனைப் பார்த்து, அப்பா! நீ யார்? நீ என் அப்பெண்ணைக்கொலைசெய்தாய்? அப்பெண் யார்? அதற்கும் உனக்கும் என்னவிரோதம்? இவ்வயோதிகன்யார்? இவையனைத்தையுந் தெளிவாகவும் சத்தியமாகவும் சொல்லவேண்டுமென்றான். அதற்கவ்வாலிபன் ஐயா! நான் சில்லறைக்கடைவியாபாரி, அந்தப்பெண் என்மனைவிதான், இவ்வயோதிகன் அப்பெண்ணுக்குத் தந்தை, அந்தப்பெண்ணுக்கும் எனக்கும் யாதொருவிரோதமுமில்லை, ஆனால் அப்பெண் இதற்குமுன்பு ஆறுமாதகாலமாக நலியாயிருந்தாள், இப்போது ஒருமாதமாகத்தான் அவளுக்குத் தேகம் சொஸ்தமாய்வந்தது, அவள் இரண்டொருதினங்களுக்கு முன்னே இலந்தைக்கனிமேல் தனக்கு ஆசையாயிருக்கிறதென்றாள், இந்தக்காலம் இலந்தைக்கனி எங்கும் அகப்படாதகாலமாதலால் நான் எங்குந் தேடியும் அது கிடைக்காமையால் கடைசியாய் ஒருபிரபுவின் தோட்டத்தில் உள்ள இலந்தைமரத்தில் மறுதாம்பாய்ப் பழுத்திருந்த மூன்று பழங்களுக்கு அதிகவிலைகொடுத்து வாங்கித்தந்தேன், அதை அவள் அப்போதே தின்னாமல் தன் படுக்கையின் பக்கத்தில் வைத்துக்கொண்டாள், உடனே நான் வழக்கப்படி கடைக்குப்போய்விட்டேன், அங்கு கடையில் நான் பேரம்பண்ணிக்கொண்டிருக்கையில் நான்கொண்டுவந்தஇலந்தைக்கனிகளிலொன்றை ஓர்வாலிபயாசகன் தன்கையிலெடுத்துக்கொண்டுபோகக்கண்டேன், உடனே அக்கனி நம்முடையதுதானோ அல்லவோவென்று அறிந்துகொள்ளும்படி அவனையழைத்து உனக்கு இந்தப் பழம் ஏதென்றுகேட்டேன், அவன் ஐயா! அதோ தெரிகிற மூன்றுவது வீதியிலே இன்ன எண்ணுள்ள வீட்டில் எனக்கொரு அபிமானஸ்திரீயிருக்கின்றாள், அவள் ஆறுமாதமாக நலியாயிருந்துஇப்போது ஒருமாதமாகத்தான் சொஸ்தப்பட்டுவருகின்றாள், அவளுக்குச் சொந்தபுருஷன் கொண்டுவந்து கொடுத்த மூன்றுகனிகளில் ஒன்றை எனக்குக்கொடுத்தாளென்றான். அவன்சொன்னவீதி, வீட்டு எண் முதலியயாவும் சரிப்பட்டிருந்தபடியால், நம்முடையமனைவிதான் இவனுக்கு அபிமானஸ்திரீயாயிருக்கிறாளென்று நினைத்து உடனே கடையை மூடிக்கொண்டு வீட்டுக்குச்சென்று என்மனைவியைப்பார்த்தபோது அவளிடத்தில் இரண்டுகனிகளேயிருக்கக்கண்டு இன்னொருகனி எங்கேயென்று அவளைக்கேட்டேன், அதற்கவள் நீங்கள் கொடுத்தபோது வாங்கிவைத்ததேயொழிய மறுபடி நான் பார்க்கவில்லையென்றாள்; அதுகேட்ட நான் அதிககோபமுடையவனாய் அந்தவா

லிபயாசகன் வார்த்தையையே நம்பி அவளைத் துண்டு துண்டாய் வெட்டிப் பெட்டியில்போட்டுக் குளத்தில், கரையிலிருந்த வலைஞனுக்குத் தெரியாமல் விட்டுவிட்டேன்; பிறகு வீட்டிற்குவந்தவுடன் எனதுகுமாரன், அழுதுகொண்டு திண்ணையின்மேலுட்கார்ந்திருக்கக்கண்டு, ஏனப்பா அழுகின்றாய்? என்றேன்; அதற்கு அவன் அப்பா! அம்மாள் படுக்கையின் பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்த இலந்தைக்கனிகள் மூன்றிலொன்றை நான் அம்மாளுக்குத்தெரியாமலெடுத்துப்போய்த் தெருவில் வீட்டுக்கெதிரிலே விளையாடிக்கொண்டிருக்கையில் ஒருவாலிபயாசகன் பிடுங்கிக்கொண்டோடினான், அவனுடன்கூட நானும் ஓடியபோது, அவன் அக்கனியின் விருத்தாந்தத்தைக்கூறும்படி என்னைக்கேட்டான், நான் அம்மாள் நோயாயிருந்து சொஸ்தப்பட்டதையும் உன்னை இலந்தைக்கனி கேட்டதையும் நீ மூன்றுகனிகள் கொண்டுவந்து கொடுத்ததையும் சொன்னேன், இவ்விஷயங்களையெல்லாம் நான்கூறியும் அவன் அக்கனியைக் கொடுக்காமற் போய்விட்டான், அம்மாள் பழத்தைத்தேடிப்பார்த்து என்னைக்கேட்பார்களேயென்றழுகிறேனென்று சொன்னதன்மேல், நான் ஆய்ந்தோய்ந்துபாராமல் எனதருமை மனைவியைக் கொலைசெய்ததற்காக இன்னமும் துக்கித்துப் பிரமைகொண்டவனாயிருக்கிறேன், நிரபராதியான என்மனைவியைக்கொன்று நான் இன்னும் ஜீவித்திருப்பதினும் இராஜதண்டனைக்குள்ளாகி உயிர் துறப்பதே உத்தமமென்று விளம்பினான். இவையனைத்தையும் விரிவாய்ச் சத்தியபூர்வகமாகக் கேட்ட மந்திரி இவன்தான் கொலைசெய்தவனென்று நிச்சயித்துக்கொண்டு அவனை அரசனிடத்திற்கழைத்துக்கொண்டுபோய் அவன் வாய்ப்படவே சவிஸ்தாரங்களையெல்லாம் சொல்லச்சொல்லி அவனே கொலைசெய்தவனென்று அரசனுக்குப் புலப்படச்செய்தான். அதன் பின்பு அரசன் ஆம், ஆம், இப்போது இவன்தான் கொலைசெய்தவனென்று நன்றாய்த்தெரியவருகிறது, ஆனால் இவனுக்கும் அப்பெண்ணுக்கும் நிர்ஹேதுவாய் அவ்வளவு விரோதம் விளையும்படி செய்த அவ்வாலிபயாசகனே இக்கொலைத்தண்டனையை யடையவேண்டுமாகையால், இனி அவ்வாலிபயாசகனைத் தட்சணமே கண்டுபிடிக்கவேண்டுமென்று மந்திரிக்கு உத்தரவுசெய்தான். அதுகேட்டமந்திரி "மழைவிட்டும் தூவானம் விடவில்லை." என்கிறபழமொழிப்படி இன்னும் நம்மைச்சனியன் விடவில்லையே யென்ற துக்கத்துடனே வீட்டிற்குவந்து ஒழியாக்கிலேசத்தோடு உட்கார்ந்துகொண்டிருக்கையில், வீதியிலோடிவிளையாடிக்கொண்டிருந்த சிறு குழந்தையாகிய அவன்புதல்வி உள்ளேவந்து அங்கு உட்கார்ந்துகொண்டிருந்த தன் தந்தையாகிய மந்திரியின்மடிமீது உட்கார்ந்தது. அப்போது மந்திரி அதிகமனவருத்தமடைந்திருந்தும் தன் குழந்தையினிடத்துவைத்த பரிவால் அக்குழந்தையை முத்தமிட்டுக்கொண்டு உடம்பிற் படிந்திருந்த தூசுகளைத்துடைத்துக்கொண்டுவருகையில் அதன் மடியில் ஏதோ ஒன்று உ

ண்டையாயிருக்கக்கண்டு அதன்மடியை அவிழ்த்துப்பார்த்தபோது அது இலந்தைக்கனியாயிருக்கக்கண்டு அதிக குதூகலமுடையவனாய் அக்குழந்தையைப்பார்த்து, அம்மா! உனக்கிந்தப்பழம் ஏது? என்றுகேட்டான். அதற்கு அக்குழந்தை-அப்பா! நான் வீதியில் விளையாடிக்கொண்டிருந்தபோது ஒருவன் என்னிடத்தில் ஒரு அணா வாங்கிக்கொண்டு இதைக்கொடுத்துப்போய்விட்டானென்றது. அதுகேட்ட மந்திரி உடனே தெருவிலோடி அவனைக்கண்டுபிடித்து அரசனிடத்தில் அழைத்துக்கொண்டுபோனான். அரசன் அவனுடைய வாக்குமூலத்தைக் கிட்டிக்கோல்போட்டுக்கேட்டுத் தெரிந்துகொண்டு, வீணாய் ஒருவன் பெண்சாதிமேல் அவதூறுகள் சொல்லி அவள் புருஷனை நம்பச்செய்து அவனுக்கு அவளைக்கொல்லும்படியான கோபம் வரச்செய்தமையால் இப்படிப்பட்ட பெரும் பொய்யன் உயிரோடிருக்குமளவும் எனது நகரம் சீர்படாதாகையால் இன்று உன்னைச் சிரச்சேதம் செய்யும்படி உத்தரவு செய்தேனென்று அவனுக்குச்சொல்லி அவனைத் தண்டனைக்காரர் கையில் ஒப்பித்துவிட்டு, தீரவிசாரியாமல் தான் காதாரக்கேட்டதையும் கண்ணாரப்பார்த்ததையும் நம்பி தன் மனைவியைக்கொலைசெய்துவிட்டு மனந்தடித்துக்கொண்டிருக்கும் வாலிபனுக்கு விவாகம் மறுபடி செய்துகொள்ளவேண்டிய அளவுக்குத் திரவியங்கொடுத்தனுப்பிவிட்டான். முற்காலத்தில் அரசர் செலுத்திய நீதிக்கும் இப்போது அரசர்கள்செலுத்தும் நீதிக்கும் பேதமிருக்கினும் "கண்ணாரக்கண்டதும்பொய், காதாரக்கேட்டதும்பொய், தீரவிசாரித்ததுமெய்." என்னும்பழமொழிக்கு இக்கதை ஒருநல்ல உதாரணமாயிருக்கிறதாகையால் இதை எழுதினோம்.

விவிதவிஷயவிளக்கவினாவிடை.

(தொடர்ச்சி.)

84. சீடன்.—ஐயா! பஞ்சேந்திரியங்களின்சிலகுணவிசேடங்களைப்பற்றியும் வைத்தியர்பிணியாளிகளுக்குப்பண்ணுஞ்சில எச்சரிக்கைகளுக்குள்ளகாரணங்களைப்பற்றியும் மற்றும் சில விஷயங்களைப்பற்றியும் தாங்கள் நயம்படக்கூறிய அருமையான விஷயங்களனைத்தையும் நன்குணர்ந்தேன். இப்போதுதூக்கம், கனவு முதலிய சிலவற்றைக்குறித்து எனக்குச் சில சந்தேகங்களிருக்கின்றன. அவற்றிற்கும் தாங்கள் தயைசெய்து விடையளிப்பீரென்று பிரார்த்திக்கிறேன். தூக்கம் என்பது யாது?

ஆசிரியர்.—தேகத்தின் பற்பல அவயவங்களையும் இயக்குவதற்கு மூலகாரணமாகிய மூளைக்கும், தேகத்தின் சிலபாகங்களுக்கும் சிறி

துநேரம்சம்பந்தமற்றிருக்கும்நிலைமைக்குத்தான்தூக்கமென்றுபெயர். ஆனால், நாம் தூங்குங்காலத்தில் தலைமூளைக்கும் தேகத்திலுள்ள மற்றெல்லாப் பாகங்களுக்கும் முற்றும் சம்பந்தமற்றுப்போனதாக நாம் எண்ணுவது கூடாது; ஏனெனில், உதிரத்தைத் தேகமுழுமையும் பரவச்செய்வதற்குக் காரணமாயுள்ள இருதயஸ்தானம், நாம் உஸ்வாஸம் நிஸ்வாஸம் செய்வதற்குக் கருவியாயுள்ள சுவாசாசயமென்னும் ஈரல் முதலிய சில அகத்துறுப்புக்கள் நாம் தூங்கும்போது தத்தம் வேலைகளைச்செய்துகொண்டேயிருக்கின்றன. அக்காலத்தில் இவைகளுக்கும் மூளைக்குமுள்ளசம்பந்தம்நீங்குவதில்லை. ஆனால் நம்முடைய மனதின் சுவாதீனத்திற்குட்பட்ட சில பாகங்களுக்கும் மூளைக்குமுள்ள சம்பந்தமாத்திரம் நாம் தூங்கும்போது சிறிதுநேரம் நின்றிருக்கிறது. அப்போது கை-கால்-கண்-நா முதலிய உறுப்புக்களை இயக்கத்தக்க நரம்புகள் நம்முடைய மனதின் சுவாதீனத்தி லிராமலும் மூளையோடு சம்பந்தப்படாமலுமிருக்கிறபடியால், ஒரு வீணையின் முறுக்காணியின் வசத்திலிராத தந்திக்கம்பிகள் தளர்ந்திருப்பதுபோல அந்நரம்புகள் தளர்ச்சியடைந்து செயலற்றுநிற்கின்றன. இவ்விஷயத்திற்கு ஒரு உதாரணங்காட்டுவோம். இராமசாமியென்பவன் நன்றாய் வேலைசெய்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறானென்றுவைத்துக்கொள்வோம். அப்போது அவனுடைய தலையை நேரே நிமிர்ந்திருக்கச்செய்யும்கழுத்துநரம்புகள் அவனுடைய தலைமூளையின் சுவாதீனத்திலிருக்கிறபடியால், வீணையின் தந்திக்கம்பிகளை முறுக்காணிபிடித்துக்கொண்டிருப்பதுபோல் மூளை அந்நரம்புகளை இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் அவனுடைய தலைநிமிர்ந்து கழுத்துக்குமேலே நின்றுகொண்டிருக்கிறது. இப்படியிருக்கையில் இளைப்பு மிகுதியினால் அவனுக்குத் தூக்கம் வரும்போது (எனவே, மூளைக்கும் அவனுடைய கழுத்து நரம்புகளுக்குமுள்ள சம்பந்தஞ் சிறிது நீங்கும்போது) அக்கழுத்துநரம்புகள் அதுவரையில் பிடித்திழுத்து நிமிர்த்திவைத்துக்கொண்டிருந்த தலை மார்பை நோக்கிக்கீழே மெல்லவரத் தலைப்படுகிறது. அப்போது சமீபத்தில் யாராவது சந்தடி பண்ணுவார்களாகில் உடனே அவன் விழித்துக்கொள்ளுகிறான். (எனவே, அவனுடைய கழுத்து நரம்புகளுக்கும் மூளைக்கும் மறுபடியும் சம்பந்தமுண்டாய்விடுகிறது.) உடனே அவன் முன்போலவே தலையை நிமிர்த்தி நாற்புறமும் பார்க்கிறான். சந்தடி சிறிது அடங்கியவுடனே அவனுடைய தலை மறுபடியுங் கீழே மார்பைநோக்கி வருகிறது. இவ்வுதாரணத்தை நாம் உற்றுப்பார்க்கையில் தூக்கமென்பது தலைமூளைக்கும் தேகத்தின் சில கருவிகளுக்குமுள்ள சம்பந்தம் சிறிதுநேரம் நீங்கியிருப்பதேயாமென்று தெளிவாய் விளங்குகிறது.

85. கே.—நமக்குத் தூக்கம் வருவதற்கு நேரான காரணம்யாது?

ஆ.—மூளைக்குச் சாதாரணமாய் எவ்வளவு உதிரம் தேகத்தின் மற்றப்பாகங்களினின்றும் போய்க்கொண்டேயிருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு அம்மூளையினிடமாக உதிரம் செல்லாமற் போனாலும், மூளைக்கு உதிரத்தைக் கொண்டுபோகும் நரம்புகள் சுருங்கி உதிரப்போக்குக்கு அநுகுணமாயிராமற்போனாலும் உடனே நமக்குத் தூக்கம் வருவது இயற்கை; எனவே, மூளை இடையிலுள்ள பல்வேறு நரம்புகளின் வழியாக தேகத்தின் பற்பல கருவிகளை இயக்காதபடி, அக்கருவிகளுக்கும் மூளைக்குமுள்ள சம்பந்தம் சிறிதுநேரம் நின்றுவிடும். இதற்குச் சில உதாரணங்கள் எடுத்துக் காட்டுகிறோம். நாம் நன்றாய் மெய்வருந்தி நெடுநேரம் வேலைசெய்வோமாகில் நம்முடைய கரசரணாதி அவயவங்கள் பலமுறையும் இயங்குகிறபடியால் அவைகளினிடத்து அதிக உதிரம் பாயவேண்டியதாயிருக்கிறபடியினாலே, மூளைக்குச்செல்லும் உதிரம் அளவில் குறைவுபடும். மேலே யாம் காட்டியபடி, மூளைக்குச் செல்லவேண்டிய உதிரத்தின் அளவு குறைவுபட்டவுடனே இளைப்பு அல்லது அயர்வு அல்லது தூக்கம் வருகின்றது; இந்தப்படியே நாம் நன்றாய்க்காய்ந்த வெந்நீரில் தலைநீங்கலாக ஏனைய அவயவங்கள் நனையும்படி குளிப்பதனாலும் வயிறு நிறையப் போஜனம் செய்வதனாலும் உடனே தூக்கம் வருகிறது. இதற்கும் மேலே யாம் காட்டியதே காரணமாகும், எப்படியென்றால், வெந்நீரில் குளிக்கும்போது தலை நீங்கலாக தேகத்திலுள்ள மற்றக் கருவிகளுக்கும், வயிறு நிறையச் சாப்பிடும்போது ஆகாரப்பைக்கும் அதிகமாய் உதிரம் செல்லுகிறபடியால் மேலே கண்ட காரணத்தினாலே தூக்கம் உடனே வரவேண்டியதுதானே. சாராயம் அபினி முதலிய லாகிரி வஸ்துக்களை உட்கொள்ளுவதனாலும், கபாலத்தைச்சேர்ந்த சில நரம்புகளில் ஜலதோஷத்தினாலே நீர் கோர்த்துக்கொள்வது முதலிய அநேக காரணங்களினாலும், மூளைக்கு உதிரம்போவதற்கு மார்க்கங்களாகவுள்ள மூளை நரம்புகள் சுருங்கிவிடுவது வழக்கம். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் மூளை தேகத்தின் ஏனைய உறுப்புக்களை இயக்காது. அந்த நிலையைத்தான் தூக்கமென்றும் மயக்கமென்றும் இளைப்பென்றும் களையென்றும் உலகினர் கூறுவர்.

86. வி.—நாம் தூங்கும்போது விவேகமாகிய பகுத்தறிவு இயங்கிக்கொண்டிருக்கிறதா?

ஆ.—அது இயங்கிக்கொண்டிருக்கிறதென்பதற்கே அநேக பிரமாணங்களுள. சில சமயங்களில் நாம் படுக்கைக்குப் போகும்போது இராத்திரி இத்தனைமணிவேளைக்கு நாம் அவசியம் எழுந்திருக்கவேண்டுமென்று சிறிதுநேரம் நன்றாய்த்தீர்மானித்துவிட்டுப் பிறகு உறங்குவோமாகில், நம்முடைய தீர்மானத்தின்படியே அதேமணிவேளைக்கு நாம் விழித்துக்கொள்வதை அநுபவவாயிலாகக்காணலாம். இதனால், நாம் தூங்குவதற்குமுன்னே கொண்ட ஒரு சங்கற்பத்தை

சதா விழித்துக்கொண்டேயிருக்கிற நம்முடைய அறிவு நிறைவேற்றுகிறதென்று தெரியவருகிறது. தூங்குவதற்குமுன்னே சிறிதுநேரம் சிலபாடங்களை நாம் நன்றாய்வாசித்து அவைகளைப்பாராமல் ஒப்பிக்க எவ்வளவு முயன்றபோதினும் அப்பாடம் வாராமலேயிருக்கிறது. அப்படியிருந்தும் நன்றாய் அயர்ந்து தூங்கியெழுந்தபிறகு அப்பாடத்தைமீண்டும் ஒரே ஒருமுறை வாசித்தவுடனே அதுபாடமாய்விடுகிறது. தூங்குவதற்குமுன்னே எத்தனையோதரம்வாசித்தும் வாராதபாடம் தூங்கியெழுந்தவுடனே ஒருமுறை வாசித்தமாத்திரத்தில் வரும் விசித்திரத்தை யோசிக்கையில், நாம் தூங்கிக்கொண்டிருந்தபோது நம்முடைய அறிவு சும்மாவில்லையென்றும், அது நம்முடைய பாடத்தை ஞாபகத்தில் பதிவிக்க முயன்றுகொண்டே யிருந்ததென்றும் தெரியவருகிறது. இவ்வுண்மையைக் கல்விபயிலும் வித்தியார்த்திகளனைவரும் அநுபவவாயிலாகக்காணலாம். சில வித்தியார்த்திகள் இவ்விசித்திரத்தின் காரணத்தை அறிந்துகொள்ளாமையினாலே, தங்களுடைய புத்தகங்களைத் தலையணையாகவைத்துப் படுத்துக்கொண்டால் பாடம்வந்துவிடுமென்று கருதுகிறார்கள். ஏதேனும் கஷ்டமான ஒருகணக்கையாவது பாடலுக்கு உரையையாவது வேறே கடினமான விஷயத்தையாவது நெடுநேரம்யோசித்தும் திருப்திகரமான முடிவுதோன்றாமலிருக்க அயர்ந்து தூங்கிவிடுகிறபட்சத்தில்அதற்கு முடிவு தூக்கத்தில் தோன்றிவிடுவது சிலருக்கு வழக்கமாயிருக்கிறது. (France) பிரான்ஸ் தேசத்திலிருந்த (Condillac) காண்டிலாக் என்னும் சிறந்த தத்துவசாஸ்திரியாரொருவருக்கு இந்தப்படியே அனேகசிறந்த தத்துவசாஸ்திர உண்மைகள் கனவிலேயே விளங்கியதாக அவருடையசரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறே(Franklin) பிராங்க்லின் என்பவரும் அனேகவிஷயங்களைக் கனவிலேயே கண்டறிந்ததாகச் சொல்லப்படுகிறது. (Coleridge) காலரிட்ஜ் என்பவர் தம்முடைய கனவிலேயே எதுகை மோனைமுதலிய காவியலட்சணங்களமையுமாறு நயம்பட 100 வரிகள்கொண்ட ஓர் அற்புதமான கவியைச்செய்துமுடித்தனர். இவைபோன்றபிரமாணங்களினாலே தேகத்தின் கருவிகாணங்களெல்லாம் ஓய்ந்து நிற்கும்போதும் ஜீவசைதன்யமாகிய ஒருபொருள் (அதை அறிவென்றாலுஞ்சரி, மனமென்றாலுஞ்சரி, ஆத்மா என்றாலுஞ்சரி, வேறேஎதுவென்றாலுஞ்சரி) இருக்கிறதென்பதுமாத்திரம் திரிகாலத்தும் நிச்சயம். இந்தப்பொருள் எப்போது நம்மைவிட்டு நீங்குகின்றதோ அப்போது நாம் பிணமாகிவிடுகிறோம்.

87. கே.—நாம் ஏன் கனவு காண்கிறோம்?

ஆ.—நாம் விழித்துக்கொண்டிருக்குங்காலத்தில் நாம் என்னென்ன விஷயங்களை அறிகிறோமோ அவைகளின்தோற்றங்களெல்லாம் மூளையின் அணுரூபமான பல்வேறு அறைகளில் படிந்திருக்கின்றன.

நாம் தூங்கும்போது மூளைக்கும் தேகத்தைச்சேர்ந்த மற்றப்பாகங்களுக்குமுள்ள சம்பந்தம் சிறிதுநேரம் நின்றிருக்கிறபடியால், மூளையின் அச்சிறு அறைகள்இயங்கிஒன்றோடொன்று தாக்கிக்கொண்டிருக்கும். அப்போது அவைகளிற்படிந்துள்ளதோற்றங்கள் நம்முடைய அறிவுக்குப்புலப்படும். அத்தோற்றங்களை நம்முடைய அறிவு பார்த்துக்கொண்டிருப்பதைத்தான் நாம் கனவு காணுகிறதென்று சொல்லுகிறது. ஒருவன் தன்னை ஒரு பெருவேங்கைப்புலி துரத்திக்கொண்டுவருவதுபோற் கனவுகாண்கிறான். உடனே அவன் தப்பித்துக்கொள்வதற்காகத் திப திபவென்று நாற்புறமும் ஓடுவதுபோலவும் கூவுவதுபோலவும் கனவு காண்கிறான். இவ்வாறு அவன்காண்பவையெல்லாம் தோற்றம் மாத்திரமாகவே தன்னுடைய அறிவுக்குப் புலப்பட்டுக்கொண்டிருக்கிறபடியாலும், அச்சமயத்தில் அத்தோற்றம் பிறத்தற்கிடமாகிய மூளைக்கும் தேகத்தின் கரசரணாதி அவயவங்களுக்கும் சம்பந்தம் சிறிது நீங்கியிருக்கிறபடியாலும் வாஸ்தவத்தில் அவனெழுந்து ஓடுவதற்குக் கூடாமையாயிருக்கிறான். ஆனால் சில சமயங்களிலே அத்தோற்றங்கள் மிகவும் பலமாயிருக்குமானால், மூளைக்கும் மற்ற அவயவங்களுக்கும் நின்றிருந்தசம்பந்தம் திடீரென்று மீண்டும் உண்டாய்விடும். அப்போது அவன் வாஸ்தவத்தில் கூக்குரலிட்டுக்கொண்டே தன்படுக்கையைவிட்டு அலறியெழுந்து நாற்புறமும் ஓடுவான். நாம் விழித்துக்கொண்டிருக்கும்போதும் நம்முடையதேகத்தைச்சேர்ந்த ஒவ்வொரு அவயவத்தின் தொழிலுக்கும், அதததற்கேற்றதோற்றம் அல்லது எண்ணம் முன்னே மூளையில் உண்டாவதுதான்காரணம்.

88. சீ.— மூளையின் பல் வேறு அறைகளுக்குள்ளே ஏதோ ஒருஅறை இயங்குவதனாலே அதிற்படிந்துள்ள தோற்றம்நம்முடைய அறிவுக்குப் புலப்படுமானால், ஏதோ ஒரு விஷயத்தை நாம் கனவாகக் காணவேண்டும்; அப்படிக்கன்றித் தொடர்ச்சியாய் நெடுங்காலம் அனேக விஷயங்களில் நாம் பிரவர்த்தித்துக் கொண்டுவருவதாக நாம் கனவு காணுவதற்குக் காரணம் யாது?

ஆ.—இதற்கு இரண்டு காரணங்கள் கூறுதல் கூடும். தொடர்ச்சியாய் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டுள்ள அனேக விஷயங்களைப்பற்றிய தோற்றங்களின் காட்சியனைத்தும் மூளையின் ஒரு அறையின் இயக்கமாகவே யிருத்தல்கூடும். ஒருமாதபயணம் போகத்தக்க ஒரு ஊருக்குச்செல்ல நீ வீட்டைவிட்டுப் புறப்பட்டதும், அதற்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்ததும், வழியில் மஜில்கள்தோறும்இறங்கியதும், அங்கங்கு சில விஷயங்களைக்கண்டதும், நீ கடைசியாக ஊரைப்போய்ச் சேர்ந்ததும், அங்கு சிலநாளிருந்து சில விவகாரங்களை நீ நடத்தியதும், மீண்டும் நீ வீடுவந்துசேர்ந்ததும் ஆகிய இத்தனை காரியங்களும் சற்றேறக்குறைய ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட தோற்றங்களை

யன்றி முற்றும் வெவ்வேறான தோற்றங்களன்று. ஆகையால் இவ்வளவும் அணுரூபமான ஒரு அறையினுடைய இயக்கத்தின்காரியசித்தியாயிருத்தல்கூடும்; அல்லது அவ்விர்த்தாந்தத்தைப்பற்றிய தோற்றங்களடங்கிய பல ரூபமான அணுக்கள்சேர்ந்துள்ள வெவ்வேறு அறைகளின் இயக்கமாகவுமிருத்தல் கூடும். இவ்விஷயத்தை வரையறைப்படுத்திக் கூறுவது முடியாது.

89. சி.—நாம் கனவில் யாத்திரைசெய்யுந்தூரமும் அதற்காகச் செல்லும் காலமும் வாஸ்தவத்திலுள்ள தூரத்திற்கும் காலத்திற்கும் எவ்வளவும் வித்தியாசமில்லாமலே தோன்றுவதற்குக் காரணம் யாது?

ஆ.—இது ஒரு விந்தையல்லவே; நாம் விழித்துக்கொண்டிருக்கும்போதே இடையில் ஒன்றும்விடாமல் இவ்வளவையும் ஒருவினாடியில் நாம் நினைத்துவிடலாகும். மனோவேகத்திற்கு முன்னே எந்த வேகந்தானிற்கும்? இப்பூலோகமுழுவதையும் மனதினாலே ஒரு நொடியில் நாம் சுற்றிவரலாமே? ஆகையால் கனவிலே நாம் காணும் அவ்வளவும் தோற்ற மாத்திரமே யாகையால் காலம் தூரம் ஆகிய இவைகளின்வித்தியாசம் புலப்படுவதில்லை.

90. சி.—நாம் விழித்துக்கொண்டிருக்குங்காலத்தில் மூளையின் அணுரூபமான அறைகளிற்படிந்துள்ள தோற்றங்களே நாம் தூங்கும்போது நம்முடைய அறிவுக்குத் தோன்றுகின்றனவென்னும் சித்தாந்த முண்மையாயின், சிலசமயங்களில் கனவிலே நாம் காணுந் தோற்றங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் கேவலம் அசம்பாவிதமா யிருப்பதற்குக் காரணம் யாது?

ஆ.—பெரும்பாலும் இப்படிப்பட்ட கனவுகள் ஆகாரப்பையில் சுலபத்தில் ஜீரணமாகாதபண்டங்களிருக்கும்போதுதான் நாம் காண்பதுவழக்கம். நாம் தூங்கும்போது மூளைக்கும் தேகத்தின் மற்ற உறுப்புக்களுக்குமுள்ள சம்பந்தம் சிறிது நீங்கியிருந்தபோதினும் இரத்தாசயமான இருதயம், சுவாசாசயமான ஈரல், இரைப்பை முதலிய அகத்துறுப்புக்களினியக்கத்துக்கும் மூளைக்குமுள்ள சம்பந்தமாத்திரம் சதா இருந்துகொண்டேயிருக்கிறது. ஆகையால், நாம் தூங்கும்போது அப்படிப்பட்ட முக்கியமான கருவிகளின் இயக்கத்திற்கு ஏதேனும் சிறிதுகஷ்டம் நேரிடுமானால் அது மூளையைப் பாதிக்கின்றது. அப்போது அசம்பாவிதமான தோற்றங்களும் பயங்கரமான கனவுகளுமுண்டாவது வழக்கம். ஆயினும் சம்பவிக்க முடியாததென்று நீசொல்லும் ஒவ்வொருவிஷயமும் நீ அதற்குமுன்னே தனித்தனியே வாஸ்தவத்தில் கண்டதாகவே யிருக்கும். எப்படியெனில், நீ ஆகாயத்தில் பறந்துபோவதாகவாவது, உன்னுடைய மூக்கில் நூறுகெஜநீளமுள்ள ஒருபெருந்துதிக்கைவளர்ந்துவிட்டதாகவாவது, ஒரு குதிரை பெரும் முட்டையை யிட்டதாகவாவது, உன்னுடைய நாய்க்கு ஒரு ஆண்குழந்தை பிறந்ததாகவாவது

னவு காணக்கூடும். ஆனால், பறக்குந்தோற்றமும் நீண்ட துதிக்கையின் தோற்றமும் ஓர் பெரியமுட்டையின் தோற்றமும் ஆண்குழந்தையின் தோற்றமும் வாஸ்தலத்தில் அசம்பாவிதமல்ல. அவைகள் பொருத்தமில்லாத பொருள்களோடுசேர்ந்து காண்பதுதான் அசம்பாவிதம். இப்படிப்பட்ட கனவுகள் காண்பதற்குக் காரணம் இன்னதென்பதை முன்னமே சொல்லிமுடித்தேன். (இன்னும்வரும்.)

வர்த்தமானக் குறிப்புகள்.

சோம்பலினால் விளைந்தகேடு.—பங்காளத்தில் ஒருகிராமத்திலே சமயற்காரனொருவன் வெளியேபோயிருந்தபோது, பருப்புபோட்டிருந்த பாத்திரத்தில் ஒரு நல்லபாம்பு நுழைந்துவிட்டது. அதை அவன் கவனிக்காமலே வேகவைத்தான். பின்பு அதைப்புசித்த அனைவரும் விஷத்தினால் இறந்தார்கள். மறுநாள் பாத்திரத்தைச் சுத்திசெய்கையில் உண்மை வெளியாயிற்று.

ஓர் நூதனயந்திரம்.—ஸிலோன் என்னும் இலங்கைத்தீவிலிருக்கும் கொழும்பு என்னும் நகரத்தில் வீதிகளைப்பெருக்கிச் சுத்திசெய்வதற்காக உண்டாக்கப்பட்ட ஒருநூதனயந்திரம் 6 அடிநீளமுள்ளதாய் எருதுகளால் இழுக்கப்படத்தக்கது. அந்தயந்திரத்தை முதல் நாள் பரிசோதித்துப் பார்க்கையில் அது ஏராளமாய்ப் புழுதியையெழுப்பி ஜனங்களுக்குப் பிரதிகூலத்தைவிளைத்ததாம். அதை இன்னும் நன்றாய்ச் சீர்திருத்தவேண்டுமென்று நிறுத்தியிருக்கிறார்கள்.

ஐரோப்பியஸ்திரீகள்.— இந்துதேசத்துஸ்திரீகள் தமது தேகத்தை அலங்கரித்துக்கொள்வதில் போவாவுற்று நகைகளுக்காக அலைகிறார்களென்றல்லவோ ஐரோப்பியஸ்திரீகள் என்னஞ்செய்கிறார்கள்? பாரிஸ்நகரத்திலுள்ள பெண்கள் தங்களுடைய தேகத்தை மணக்கச்செய்துகொள்ளவிருப்புற்று ஓர்வகைவாசனைத்திராவகத்தை நுண்ணிய பீச்சாங்குழலைக்கொண்டு மேற்சருமத்திற்குக் கீழுள்ள உதிரத்தோடு போய்க்கலந்து விடும்படிசெய்துகொள்ளுகிறார்கள். இத்திராவகம் உதிரநரம்புகளின்வழியாகச்சென்று பத்மினிஜாதிகளென்னும் உத்தமஸ்திரீகளின் தேகத்திற்கிருப்பதுபோல் இயற்கைமணத்தை யுண்டாக்கிவிடுகிறதாம். இவ்வழக்கத்தை ஐரோப்பாவிலுள்ள சீமாட்டிகளனேகர் வரம்பின்றி அநுசரித்துவருகிறார்கள். இத்திராவகம் தேகத்தை மணக்கச்செய்தபோதினும் தேகத்தின் சுகாதாரத்தைக் கெடுக்கத்தக்கதாயிருக்கிறதென்று வைத்தியர்கள்அபிப்பிராயப்பட்டு இத்துர்வழக்கத்தைத்தடுக்கமுயன்றும், தேகத்தை அலங்கரித்துக்கொள்வதில் பேரவாக்கொண்டிருக்கும் அப்பிரதேசத்திய சீமாட்டிகள் அவ்வழக்கத்தைக் கைவிடுகின்றிலர்.

உபாத்தியாயர் பொய்யை வெளிப்படுத்திய ஒருசிறுவன்.—இங்க்லாண்ட் தேசத்திலுள்ள ஒரு கல்விச்சாலையிலே தோளுக்குமேல் பிரம்பைத்தூக்கிச் சிறுவர்களை அடிக்கக்கூடாதென்று உபாத்தியாயர்களுக்கு உத்தரவு பிறந்திருக்க, ஒரு உபாத்தியாயர் இயற்கையில் அதிக கோபியாகையால் அவ்வுத்தரவை அலட்சியஞ்செய்து தோளுக்குமேல் பிரம்பைத்தூக்கிச் சிறுவர்களை நன்றாய்ப் புடைத்துவந்தனர். அதற்கு ஆற்றாதவர்களாகி அவ்வகுப்புச் சிறுவர்கள் மேலதிகாரிகளிடத்தில் முறையிட்டபோது அவர்கள் அவ்வுபாத்தியாயனை அவ்விஷயத்தைப்பற்றி வினவியகாலத்தில் அவர்தாம் ஒருபோதும் அவ்வாறு செய்ததேயில்லையென்று பொய்யுரையாடினர். இப்படியிருக்க அச்சிறுவர்களுக்குள்ளே ஒருவன் அவ்வுபாத்தியாயர் தோளுக்குமேலே பிரம்பைத்தூக்கித் தன்தோழர்களை அடித்துக்கொண்டிருக்கும் சமயம்பார்த்து அவருக்குத் தெரியாமலே ஒரு மூலையிலிருந்து அவரைப் படம்பிடித்து அதைக்கொண்டுபோய்அக்கல்விச்சாலையின்மேலதிகாரியிடத்திற்காட்டி விட்டான். அதை மறுக்க உபாத்தியாயருக்குக் கூடாமற்போய்விட்டது. இங்க்லாண்டிலுள்ள சிறுவர்களுடைய தைரியமே தைரியம் !

ஆங்கிலேய அரசாட்சிப்பெருக்கம்.—உலகம் தோன்றியது முதல் இதுவரையில் எந்த அரசர்களும் நமது ஆங்கிலேயரைப்போல் அவ்வளவு வியாபகமான அரசாட்சிசெய்திலர். உலகத்திலுள்ள ஒவ்வொருகாண்டத்திலும் இவர்களுடைய அரசாட்சிக்குட்பட்ட தேசங்களிராமலில்லையாகையால் "ஆங்கிலேயருடைய அரசாட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் சூரியன் ஒருபோதும் அஸ்தமிப்பதில்லை." என்னும் பழமொழி நடைபெற்றுவருகின்றது. ஏதோ ஒரு காண்டத்தில் சூரியன் மறைந்தபோதினும் வேறொரு காண்டத்தில் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறபடியாலும், எல்லாக்காண்டங்களிலும் ஆங்கிலேயருடைய அரசாட்சிக்குட்பட்ட தேசங்களிருக்கிறபடியாலும் அப்பழமொழி சத்தியமே. மஹாராணியவர்களுடைய செங்கோலுக்குட்பட்ட விஸ்தீரணத்தைக் கணக்கிட்டுப்பார்த்த ஒருவர் அடியில்வருமாறு கூறுகின்றனர்:—மஹாராணியவர்களுடைய அரசாட்சிக்குட்பட்ட பூமியின்மொத்தம் பூகோளசாஸ்திரப்படி உலகத்தில் ஐந்திலொருபாகம். அந்த இராஜ்ஜியங்களுக்குள்ளே பெரியவாவிகள் ஆயிரமும், சிறந்த நதிகள் இரண்டாயிரத்தைந்தும், தீவுகள் பதினாயிரமும், இராணுவவீரர்களின்மொத்தம் ஐந்துலட்சமும், போர்க்கப்பல் ஆயிரத்துநூறும், போர்க்கப்பல்வீரர்களின்தொகை லட்சமும், குடிகளின்தொகை [illegible]கோடியே யெண்பதுலட்சமும் இருக்கின்றன. இவ்வரசாட்சி மேன்மேலும் ஓங்குக.

PRINTED AT THE ALBINION PRESS, MADRAS.